ஆதிசங்கரரின் அருள் மொழிகள்

நீரானது இயற்கையில் சுத்தமாகவே இருக்கிறது. வேறு பொருள்கள் அதோடு கலப்பதால், அது தூய்மை கெட்டு சேருகிவிடுகிறது. அசுத்தங்களை விலக்கிவிட்டால் அது மீண்டும் தெளிவடைந்து சுத்தமாகி விடுகிறது. அதைப் போலவே தான் ஆத்மாவும். ஆத்மாவின் உண்மை இயல்பை அவித்தை மறைக்கிறது. அக்களங்கத்தை விசாரணை மூலம் நீக்கிவிட்டால், ஆத்மா மீண்டும் பிரகாசத்துடன் வெளிப்படுகிறது.

அசத்தாயும் மித்தையாயும் இருப்பதுஒழிந்துவிட்டால், இந்த ஜீவாத்மாவே பரமாத்மா என்ற தெளிவு ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே அந்த நித்திய ஆத்மாவினின்றுஅகந்தை போன்ற மாசுக்களைக் களைந்து விடவேண்டும்.

பிரமத்துடன் ஐக்கியத்தை உணர்ந்துவிட்டால், இச்சம்சார பந்தங்களிலிருந்து விடுதலையடைந்து, இரண்டற்ற ஏகப் பரம்பொருளான, பேரின்பமயமான பிரம்மத்தை எளிதில் அடையலாம். இந்த ஏகப்பரம் பொருளே உண்மைப் பொருள். இதைவிடஉயரியமெய்ப்பொருள் வேறெதுவும் இல்லை.

இப்பிரபஞ்சம் யாவும் உண்மையில் பிரம்மமே. இதன் சராம்சம் அதுவே. அதுவன்றி இது இருக்க முடியாது. இதற்குத் தனி வாழ்வில்லை.

பிரபஞ்சம் உண்மைப் பொருளாயின், அதற்கு அழிவே இருக்க முடியாது. தொந்தம் இருந்து கொண்டே இருக்கும். வேத நூல்கள் பொய்த்துவிடும். உண்மைகளை வெளியிட்ட ஆண்டவனும் பொய்யனுவான்.

பரப்பிரம்மம் சொற்பதங் கடந்தது. ஒளிபெற்ற விழிக்கே காட்சியளிப்பவன்.

வாக்கு மனம் மூலம் அறியப்படும் இவ்வுலகம், இப்பிரபஞ்சம் பிரம்மமே. பிரம்மத்தை தவிர வேறொன்றுமில்லை. மட் பாண்டம், மண்ணினின்று வேறுன தன்று.

எவனொருவன் தன் உள்ளொளியின் காரணமாக ஜீவனையும் பிரம்மத்தையும் வேறுபடுத்துவதில்லையோ, அவனே ஜீவன் முக்தன்.

நான் உண்மையில் பிரம்மம்; இரண்டற்றவன்; யாவற்றையும் தாங்குபவன்; எப்பொருளுக்கும் ஒளி தருபவன். எனக்கு எண்ணற்ற உருவங்கள் உண்டு. நான் எங்கும் இருப்பவன். பன்மையற்றவன், நித்தியன், தூயன், எனக்கு மாறுதலில்லை; செயலில்லை, பகுதிகள் அற்றவன், பரிபூரணன். உடல், உறுப்புக்கள், பிராணன், புத்தி இவற்றின் அழிவு என்னைப் பாதிப்பதில்லை.

ஒரு புல், ஒரு மரம், பூண்டு, நெல் இவற்றை எரித்தால் சாம்பலாகின்றன. இதைப்போலவே உடல் உறுப்பு, பிராணன், மனம் ஆகியன கொண்ட இப்புறவுலகம், சுவானுபூதிக்குப் பின் அனுபவம் என்னும் தீயினுல் எரிக்கப்படுகின்றன.

இருள் சூரிய ஒளியினின்று வேருனது; சூரியோதயமானதும் அவ்விருள் மறைந்து விடுகிறது. அதைப்போலவே அனுபூதிக்குப் பின் இப்புறவுலகம் யாவும் பிரம்மத்திடம் லயித்து விடுகின்றன.

பாலில் பாலை வார்த்தால் ஒன்ருகக் கலந்துவிடுவதுபோல், தண்ணீரில் தண்ணீரை வார்த்தால் ஒன்றி விடுவதுபோல, ஆத்மஞானம் கைவரப்பெற்ற முனிவன் பரமாத்மாவிடம் ஒன்றி விடுகிருன்.

பந்தமும் விடுதலையும் மாயையினுல் செய்யப்படும் ஜாலவித்தை. அவை ஆத்மாவுக்கு உரியனவல்ல. பின்னமற்றதும் செயலற்றதும் களங்கமற்றதும் இரண்டற்றதுமான பரம்பொருளுக்கு, வரம்போ கட்டுப்பாடோ எங்ஙனம் இருக்க முடியும்?

சாவுமில்லை, பிறப்புமில்லை, கட்டுப்பட்ட ஆத்மாவுமில்லை, விடுதலையடைந்த ஆத்மாவுமில்லை — இதுவே இறுதியில் உண்மை.

உலகில் துன்புறுவோருக்கும், தண்ணீரைத் தேடி, மதிமயக்கத்தினுல் பாலைவனத்தில் அலைவோருக்கும், எளிதில் அடையக்கூடிய ஆறுதலளிக்கவல்ல அமுதக்கடல் இரண்டற்ற பரமமே!

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை, 4 தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டிபஸார், தியாகராயநகர், சென்னை-17.

ஸ்ரீ

சௌமிய

ஆனி

15-6-69

விலை 30 காசு

அருள்



ஆசிரியர்:

இறைவி வணக்கம்

ஸ்ரீமூகமகாகவி

சகல காரண (காரிய)ங்களுக்கும் அப்பாற்பட்ட ஞான வடிவானவள். குங்குமப் பூங்கொத்துப் போன்ற மிருதுவான திருமேனி படைத்தவள். மலர்க்கொடியைப் போல் தோற்றம் அளிப்பவள். கருணையே தன் வடிவமாகப் பெற்றவள். அவள் காஞ்சிமா நகரின்கண் காம பீடத்தில் அமர்ந்து திருவிளையாடல் புரிகின்றாள்.

வில், அம்புகள், அங்குசம், பாசம் இவற்றைத் தன் திருக் கரங்களிலே தரித்தவளாய், கடினமான நகில் மண்டலத்தின் பாரத்தால் (சிறிது) சாய்ந்தாற்போல் தோற்றமளிக்கும் திருமேனியுடன், முக்தி யென்னும் ஆனந்தத்திற்கு மூல மாய்க் காஞ்சியில் வீற்றிருக்கும் அந்தப் பரம்பொருளை (என் உள்ளத்தால்) பற்றிக்கொள்கிறேன்.

நினைத்த பலன்களை நிறைவேற்றிக் கொடுப்பதில், காஞ்சியிலே கோயில் கொண்டருளியுள்ள அந்தப் பரதேவதை, எனக்குச் சிந்தாமணி இரத்னமாகவே விளங்குகிறாள். (பல பிறவிகளில் தொடர்ச்சியாக) நெடுங் காலம் வழிபட்டு வந்துள்ள பக்தர்களுக்கு, அவள் எளிமை யானவள். ஞானானந்த ரூபிணியாய், அகில புவனங்களுக் கும் ஆதாரமாக இருக்கும் அவள், என் உள்ளத்தைக் குளிரச் செய்வாளாக !

திருச்சிற்றம்பலம்

ஏகமோ ? அன்றி யநேகமோ ? என்றும்
இயற்கையோ ? செயற்கையோ ? சித்தோ?
தேகமோ? பொதுவோ ? சிறப்பதோ ? பெண்ணோ?
திகழ்ந்திடு மாணதோ? அதுவோ ?
யோகமோ ? பிரிவோ ? ஒளியதோ ? வெளியோ ?
உரைப்பதெற் றேவென வுணர்ந்தோர்
ஆகமோ டுரைத்து வழுத்தநின் றோங்கும்
அருட்பெருஞ் ஜோதியென் னரசே !

எங்குமாய் விளங்கும் சிற்சபையிடத்தே
இது அது வெனவுரைப் பரிதாய்த்
தங்குமோ ரியற்கைத் தனியனு பவத்தைத்
தந்தெனைத் தன்மய மாக்கிப்
பொங்குமா னந்த போகபோக் கியனாய்ப்
புத்தமு தருத்தியென் னுளத்தே
அங்கையிற் கனிபோன் றமர்ந்தருள் புரிந்த
அருட்பெருஞ் ஜோதியென் னரசே !

—திருவருட்பா

காஞ்சி மகரிஷி காமகோடி ஆச்சார்யாள்

வேலவன்

நம் பாரத தேசத்தின் வட பகுதியில்தான் இராமனுகவும்கிருஷ்ணனுகவும் பகவான் அவதாரம்செய்தார். ஆனால், அந்த வட பகுதியில் இல்லாத சில தனிச் சிறப்புகள் தென் பகுதியில் அமைந்திருக்கின்றன.

முக்கியமாக, பக்திக்குப் பேர் போனது தென்னடு. இப்படி நான் சொல்லவில்லை. ''பக்தியென்னும் கன்னியானவள் தென்னட்டில்தான் பிறந்தாள்'' என்று வட மொழியிலேயே ஒரு முதுரை வழங்கி வருகிறது. உலகு எங்கிலுமே கடவுள் பக்தி குறைந்து போனுலும்கூட, தென்னட்டில் அது குறையாது என்று பாகவதம் கூறுகிறது. இதைக் காட்டிலும் தென்னட்டிற்கு வேறு என்ன சிறப்பு வேண்டும்?

இந்தச் சிறப்புக்குக் காரணம் வேறு ஒன்றும் இல்லை. கடவுளைத் தமக்குள்ளே கண்டு, தாமே கடவுள் நிலையை எய்திய ஆச்சாரியர்கள் அனைவரும் தென்னட்டில் பிறந்தவர்களே. சங்கரர், இராமானுஜர், மத்வர், மெய்கண்டார், வல்லபர் ஆகிய எல்லோருமே தென்னட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய சித்தாந்தங்கள்தாம் இன்று பாரத தேசம் முழுவதிலும் பரவி விளங்குகின்றன.

இந்த ஆச்சாரியர்களுக்குள்ளே ஆதிசங்கரர் தான் காலத்தால் முற்பட்டவர். பௌத்தர்களாலும் பாஷண்டர்களாலும் நம் பழமையான வேதங்களுக்கும் வேத நெறிகளுக்கும் ஆபத்து வந்தபோது, அவற்றைக் காப்பாற்றுவதற்கென்றே அவர் அவதாரம் செய்தவர். அவர் அப்போது அவற்றைக் காப்பாற்றியிராவிட்டால், பின்னல் வந்த இராமானுஜருக்கோ மத்வருக்கோ பாஷியம்எழுதுவதற்கு பகவத் கீதை இருந்திராது; உபநிடதங்களோ பிரம்ம சூத்திரங்களோ கிடைத்திருக்கமாட்டா.

சங்கரர் இந்நிலவுலகில் முப்பத்திரண்டு ஆண்டுகளே வாழ்ந்திருந்தார். ஆனால் அதற்குள் 320 ஆண்டுகளில் செய்யக்கூடிய காரியங்களைச் செய்து முடித்துவிட்டார். தாம் தொடங்கிய அந்தப் புனிதமான காரியங்கள் என்றென்றைக்கும் தொடர்ந்து நடைபெறுவதற்காக, கிழக்கே பூரியிலும், தெற்கே சிருங்கேரியிலும், மேற்கே துவாரகையிலும், வடக்கே பத்ரிநாத்திலும் நான்கு மடங்களை நிறுவி, அவற்றில் நான்கு சீடர்களை அமர்த்தினர். காஞ்சியில் ஒரு மடத்தை நிறுவி அதில் தாமே அமர்ந்திருந்தார்.

உலகில் உள்ள நகரங்களுக்குள்ளேயே காஞ்சிதான் தலை சிறந்தது என்று ஒரு வடமொழி சுலோகம் கூறுகிறது. காரணம், ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியாகிய அன்னை காமாக்ஷி தேவி, காஞ்சி மாநகரில்தான் வீற்றிருக்கிருள். அவள் அமர்ந்திருக்கும் பீடத்திற்

குக் காமகோடி பீடம் என்று பெயர். அந்தத் திருத்தலத்தில் அமைந்த ஆதி சங்கர பீடமும், அதே பெயருடன்தான் வழங்கி வருகிறது.

அந்தமாட்சிமைமிக்கபீடத்தை இப்போது அலங்கரித்து வருபவர் ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர ஸரஸ்வதியென்னும் திவ்யநாமம் கொண்ட ஒரு மகரிஷிகள் ஆவர். அவர்களுடைய திருவுருவத்தை அட்டையில் தாங்கி நிற்கும் பாக்கியம், ''அருள்'' பத்திரிகையின் இந்த இதழுக்குக் கிடைத்திருக்கிறது.

தாம் அமர்ந்திருக்கும் பீடத்தின் பெருமையால் தாமும் பெருமை தேடிக் கொள்ளுகிற சமயாச்சாரியர்கள் அநேகர் இருக்கிறார்கள். ஆனால் தம்முடைய சொந்த ஆன்மிக சக்தியால், தாம் இருக்கும் பீடத்துக்கே பெருமை தேடிக் கொடுக்கக் கூடியவர்கள், அரிதினும் அரிதாகவே காணப்படுகின்றனர்.

ஸ்ரீ காஞ்சி ஆச்சார்யஸ்வாமிகள், தாம் அமர்ந்துள்ள பீடத்தாலும் ஒப்பற்ற பெருமைக்கு உரியவராக விளங்குகிறார்கள். தம்முடைய தபோ வலிமையாலும் அந்தப் பீடத்துக்கு ஒரு பெரும் புகழைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள். சுருக்கமாகச் சொன்னால், ஆதி சங்கர பகவத் பாதாளே இப்போது அவதாரம் எடுத்திருந்தால் இப்படித்தான் நடந்து கொள்வார்கள் என்று கருதத் தக்கவகையில், நம்மிடையே வாழ்ந்து வருகிறார்கள் காஞ்சி ஆச்சாரியஸ்வாமிகள்.

தவத்தாலும் உபவாசங்களாலும் உலர்ந்துபோன சரீரம். ஆனால், உள்ளே இளஞாயிறு போல் இலங்கிக்கொண்டு இருக்கும் ஆன்மதேஜஸைப் பிரதிபலிக்கின்ற அழகான திருவதனம். கருணை நிறைந்த கண்கள். கனிவு நிறைந்த உள்ளம். மிகக் குறைவான பேச்சு. என்றும் குன்றாத ஆற்றல். அந்த ஆற்றலின் சாதனைகளைத்தான் என்னவென்று சொல்வது! எவராலுமே சாதிக்க முடியாதவற்றையெல்லாம், அது மிகவும் எளிதாகச் சாதித்து விடுகிறது.

ஒரு காலத்தில் நாஸ்திக மாநாடுகளும் நாஸ்திகச் சொற்பொழிவுகளும் மேலோங்கி நின்ற சென்னையிலே, இப்போது அறுசமய மாநாடுகளும் ஆஸ்திகச் சொற்பொழிவுகளும் அமோகமாக நடைபெறுகின்றன என்றால், அதற்குக் காரணம் யார்?

ஒரு காலத்தில் சைவர்களும் வைணவர்களும் ஒருவரையொருவர் வசைபாடி வந்த நம் சமுதாயத்திலே, இப்போது ஒரேமேடையில் திருப்பாவை திருவெம்பாவை மாநாடுகளும், தெய்வீகப் பேரவைகளும் நடைபெறுகின்றன என்றால், அதற்குக் காரணம் யார்?

ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகளின் ஆன்மிக பலத்திற்கு, இவைபோல் இன்னும் எத்தனையோ சான்றுகளை அடுக்கிக் கொண்டேபோகலாம். அவர்கள் உள்ளத்தால் நினைக்கிறார்கள். உடனே இறைவன் அதை நிறைவேற்றி வைக்கிறான். ஆஸ்திக உலகம் அவர்களது கடைக்கண்களின் கட்டளைகளுக்காகக் காத்து நிற்கிறது. இப்படிப்பட்ட மகான்களின் தபோவலிமையைத்தான், இன்று தமிழகம் நம்பியிருக்கிறது. இருள் படர்ந்த சூழ்நிலையில் ஒரு சுடரொளியாய்நின்று இவர்கள் வழி காட்டுகிறார்கள். இப்போது தமது எழுபத்தாறுவது ஆண்டினை எய்தியுள்ள இவர்கள், இன்னும் பல நூறாண்டுகள் பார்மிசை வாழ்ந்திருக்குமாறு, பகவானைப் பிரார்த்திப்போமாக!

ஏட்டுக் கல்வியால் என்ன பயன்?



ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

ஒவ்வொருவனும் தன் தன் கடிகாரமே சரியாக மணி காட்டுகிறது என்கிறான். அதே விதத்தில் ஒவ்வொரு சமயத்தவனும் தன் தன் சமயமே மெய்யான சமயம் என்கிறான். கடிகாரங்களெல்லாம் சரியாக மணி காட்டுபவைகளல்ல. சமயங்களெல்லாம் பரம்பொருளை முற்றிலும் உள்ளவாறு அறிந்தவைகளல்ல.

மிகைபட சாஸ்திர ஆராய்ச்சி பண்ணுவதில் நலனை விடக் கேடு தான் அதிகமாக உண்டாகிறது! அதனின்று மனக்குழப்பம் வருகிறது. சாஸ்திரங்களின் சாரத்தைத் தெரிந்து கொண்டால் போதுமானது.

வெறும் பண்டிதனாவது வேறு; சாது ஆவது வேறு. பண்டிதன் சொல்லுவது ஒன்று, செய்வது மற்றொன்று. அவனுடைய மனது காமத்திலும் காசு ஆசையிலும் உழல்கிறது. சாதுவினுடைய மனதோ ஹரியின் தாமரைத் திருவடிகளில் நாட்டப் பட்டிருக்கிறது.

வெறும் ஏட்டுக் கல்வியால் மனிதனுக்கு ஆவதென்ன? பிரார்த்தனையும் ஆத்மசாதனையும் அவனுடைய முன்னேற்றத்துக்கு அவசியமானவைகள்.

நல்ல விவேகமும் ஈசுவர விசுவாசமும் படைத்திருக்கிறவனுக்கு, ஏராளமான சாஸ்திர ஞானம் தேவையில்லை. சாஸ்திர ஞானம் ஒருவிதத்தில் இடைஞ்சலே. ஏகாந்தத்தில் இருந்துகொண்டு உள்ளன்போடு இறைவனிடம் பரிந்து பிரார்த்தனை பண்ணு. உனக்குத் தேவையானதையெல்லாம் அவர் தந்தருளுகிறார்.

தற்கொலை பண்ணிக்கொள்ளுவதற்கு ஓர் ஊசி போதுமானது. ஆனால் பிறரைக் கொல்லுவதற்கு கத்தி வாள் போன்ற ஆயுதங்கள் தேவை. தனக்குத் தெய்வ நம்பிக்கை வருவதற்குச் சிறிதளவு விவேகமிருந்தால் போதுமானது. ஆனால் பிறரைத்திருப்திப்படுத்துவதற்கு சாஸ்திர ஞானம் ஏராளமாக வேண்டும்.

புதிதாக வந்த கடிதத்தை ஒருவன் ஜாக்கிரதையாக வாங்கி வைத்திருக்கிறான். ஆனால் அதைப் படித்து அதில் அடங்கி

யிருக்கிற விஷயத்தை அறிந்து கொண்டான பிறகு, அக்கடிதத்தின்மீது கருத்தை அதிகம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. சாஸ்திர ஞானம் அத்தகையதே.

தத்துவங்களைப் பற்றிய விசாரத்தை அளவுக்கு மிஞ்சிச் செய்வது, சாதனத்துக்கு இடைஞ்சல்.

விவாதம் பண்ணுகிற மனப்பான்மை தமோகுணத்தின் செயல். ஆனால் பொருந்தாத பேச்சுப் பேசுகிற ஒருவனை பொருந்திய பேச்சால் மடக்கி அறிவுறுத்துதலில் தோஷமில்லை. இத்தகைய செயலின் மூலம் சத்துவகுணம் தமோகுணத்தின்மீது ஆதிக்கம் செலுத்துகிறது.

இரவில் தென்படுகிற மின்மினிப் பூச்சி உலகுக்குத் தான் வெளிச்சம் கொடுப்பதாக எண்ணிக் கொள்கிறது. ஆனால் நட்சத்திரங்கள் தோன்றும் பொழுது மின்மினிப் பூச்சிகளின் கர்வம் போய்விடுகிறது. நட்சத்திரங்களோ தாங்கள்தான் உலகுக்கு வெளிச்சம் தருவதாக எண்ணி இறுமாப்புறுகின்றன. ஆனால் நள்ளிரவில் சந்திரோதயம் ஆனதும் நட்சத்திரங்கள் பின்னணிக்குப் போய்விடுகின்றன. அவைகளின் கர்வமும் அடங்கிவிடுகிறது. உலகம் முழுதுக்கும் வெளிச்சத்தைக் கொடுத்து மகிழ்ந்திருக்கச் செய்வது தான் என்று திங்களுக்குத் தற்பெருமை வந்து விடுகிறது. ஆனால் சூரியோதயம் ஆகும் பொழுது சந்திரன் மங்கிப் பிறகு மறைந்துபோய்விடுகிறது. செல்வத்தைக் குறித்தோ வேறு சம்பத்தைக் குறித்தோ செருக்குற வேண்டாம். உன்னிலும்மிக்கார் உலகில் பலர் உளர்.

மதவெறி பிடித்திருக்கிறவர்கள் அவரவர் மதத்தின் மூலமாகத்தான் ஈசனை அடைய முடியும் என்று விவாதிக்கின்றனர். இந்த மனப்பான்மை சாதகன் ஒருவனுக்குப் பொருந்தாது. பலதரப்பட்ட மார்க்கங்களுள் எந்த மார்க்கத்தின் மூலமாகவும் ஈசனை அடைய முடியும்.

பகவத் கீதையையோ, பாகவதத்தையோ, அல்லது வேறு

ஏதாவது வேதாந்த சாஸ்திரத்தையோ ஒரு மனிதன் சிறிது கற்கிறான். பிறகு தனக்கு எல்லாம் விளங்கிவிட்டது என்று எண்ணிக் கொள்கிறான்.

இறைவனுடைய சிருஷ்டியில் அனைத்துக்கும் இடமுண்டு. ஆதலால் உன்னுடைய கொள்கைதான் சரியானது—மற்றவர்களுடைய கொள்கைகள் தப்பானவை என்னும் எண்ணம் உன் உள்ளத்தினுள் நுழையாதிருக்கும்படி பார்த்துக் கொள்வாயாக.

மக்களிடத்து இயல்பு• வேற்றுமை உண்டு. அதை முன்னிட்டு மத வேற்றுமையும் இருந்தே தீரும். ஒரு மதத்தை அனுஷ்டிக்கின்றவன் மற்ற மதத்தைச்சேர்ந்தவர்களிடத்து அலட்சியம் பாராட்டலாகாது. பிறமதஸ்தர்களைத் தனக்குக் கீழானவர்களாகக் கருதுகிறவன், தானே கீழ்மையடைந்து விடுகிறான்,

உ

திருச்சிற்றம்பலம்

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்;
  ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும் ;
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
  எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்;
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கந்
  திகழ்ந்தோங்க அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான்செயினும் நீ பொறுத்தல் வேண்டும்;
  தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

அருளாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
  அணுத்துணையுஞ் சினங்காமம் அடையாமை வேண்டும்;
மருளாய வுலகமெலாம் மருணீங்கி ஞான
  மன்றிடத்தே வள்ளலுனை வாழ்த்தியிடல் வேண்டும்;
இருளாமை யுறல்வேண்டும் எனையடுத்தார் சுகம்வாய்ந்
  திடல்வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்
பொருளாமோர் திருவடியிலுடையாயும் நானும்
  புணர்ந்துகலந் தொன்றாகிப் பொருந்துதல்
                    வேண்டுவனே.

—திருவருட்பா

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை

அரசனாகிய திருதராஷ்டிரன், விராட நகரத்திலிருக்கும்பாண்டவர்களைப் பார்த்து வரும்படி, தனது மந்திரியான ஸஞ்ஜயனை அனுப்பினார்.

ராஜ்யத்தில் பாகம் கேட்கக் கூடாது என்றும், யுத்தம் செய்யக் கூடாதென்றும், ''என் பிள்ளைகளுக்கு மேல் பாண்டவர்களாகிய நீங்கள்தான் அன்பர்கள்'' என்றும் சொல்லி அனுப்பி வைத்தார்.

அதேபோல் அங்கு சென்று அவர்களிடமும், ஸ்ரீ பகவானான கிருஷ்ணனிடமும் சொல்லி, ஸஞ்ஜயன் திரும்பி வந்தார்.

அரசனைப் பார்த்து ஸஞ்ஜயன், ''நேரில் வந்ததால் சரீரசிரமம் இருக்கிறது. நாளைக் காலையில் ஸபையில் வந்து அவர்கள் கூறியதை சொல்லுகிறேன். ராஜ்யத்தைக் காட்டிலும் தர்மமும் ஸத்யமும் பெரிதென நினைத்த தர்மபுத்ரரிடம் நீர் ஸரியாக நடக்கவில்லை''யென்று கூறிப் படுக்கச் சென்றுவிட்டார்.



பாரதஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்
அனந்தராம தீக்ஷிதர்

அதைக் கேட்ட அரசன் அளவு கடந்த துயரடைந்து, பாண்டவர்கள் என்ன சொல்லி அனுப்பியிருப்பார்களோ எனக் கவலை கொண்டு, அந்த இரவில் தீர்க்க தரிசியான விதுரரைக் காண விரும்பி, தூதனை அனுப்பித்தார்.

அவன் அவரை அழைத்துவந்து ''வாசலில் விதுரர் வந்து விட்டார், அழைத்து வரலாமா?'' என அரசனிடம் கேட்டான்.

அரசனும், ''தீர்க்கதரிசியான விதுரரை உடனே உள்ளே அழைத்து வா. அவரைப் பார்ப்பதில் எனக்கு எப்பொழுதும் சலிப்பில்லை'' எனக் கூறினார்.

தூதன் விதுரரிடம் சென்று, ''புத்திமானுகிய மஹா ராஜா வின் அந்தப்புரத்திற்குத் தாங் கள் செல்லுங்கள். தங்களைப் பார்ப்பதில் தனக்கு சலிப்பே இல்லையென அரசர் கூறினுர்'' என்று தூதன் கூறினுன்.

பிறகு விதுரர் திருதராஷ்டிர னின் அந்தப்புரம் சென்று, கவலை யோடு இருக்கும் திருதராஷ்டிர னைப் பார்த்து நமஸ்கரித்து, ''தங்கள் உத்திரவின்படி நான் வந்துவிட்டேன். என்னுல் செய்ய வேண்டிய காரியத்தை உத்தர விடவேண்டும்'' எனக் கூறினுர்.

''ஓ விதுர, ஸஞ்ஜயன் தர்ம புத்ரரைப் பார்த்துவிட்டு என்னி டம் வந்து, என்னைப்பலவாருக நிந் தித்துவிட்டு, நாளை சபையில் வந்து தர்மபுத்திரர் கூறிய வார்த் தைகளைச்சொல்லுவதாகச்சொல் லிச் சென்றுவிட்டான். ஆதலால் என்ன சொல்லப் போகிருனே என்ற கவலையால் என் சரீரமெல் லாம் தவிக்கின்றது. அதனுல் நித்திரை வரவில்லை. இம்மாதிரி உள்ள எனக்கு எது நன்மையை அளிக்குமென்பதை அறிந்து, தர் மத்தின் தத்துவமறிந்த விதுர, நீ உபதேசிக்க வேண்டும்'' என வேண்டினுர்.

உடனே விதுரர் ''ஸைந்யங்க ளற்றவனும், ஆயுத பலமற்றவ னும், நல்ல பலம் வாய்ந்தவனுல் எதிர்க்கப்பட்டவனுமான மனித னுக்கும், பொருளை இழந்தவனுக் கும், காமிக்கும், திருடனுக்கும், தூக்கம் வராது. இம்மாதிரியான குற்றங்கள் உம்மிடம் இல்லாமல் இருக்கிறதா? பிறர் பொருளில் ஆசை கொண்டு அதனுல் தாப மடையாமல் இருக்கிறீரா?'' எனக் கேட்டார்.

உடன் திருதராஷ்டிரன், ''இந்த ராஜ ரிஷி வம்சத்தில் பெரியோர்களால் அங்கிகரிக்கப் பட்டவன் நீ ஒருவனே. க்ஷேமத் தை அளிக்கக் கூடியதும் தர்மத் துடன் கூடியதுமான சொற்களைக் கேட்க ஆசைப்படுகிறேன்'' என் ருர்.

விதுரர் கூறுகிருர்:

''ஓ அண்ணு, அரசர்களுக்கு உரிய ஸகல லக்ஷணங்களையும் உடைய ராஜா, எல்லாவுலகங் களுக்கும் அதிபதியாவான். அந்த லக்ஷணங்களை உடையவர் யுதிஷ்டிரர். அவரைத் தாங்கள் சமீபத்தில் வைத்துக் கொண்டு காப்பாற்ற வேண்டியதாய் இருக்க, அவரைக்காட்டிற்குத்துர த்திவிட்டீர். நீர் இராஜ லக்ஷண மற்றவர். உமக்கு நேத்ரமில்லை. நீர் தர்மாத்மாவாகவும் தர்ம மறிந்தவராகவும் இருந்த போதி லும், உமக்கு ராஜ்யமில்லாமை யால் உம் தம்பி பாண்டு ராஜ் யத்தை அடைந்தார். ஆகையால் இராஜ்யம் அந்த வம்சத்துக்கே உரியது. யுதிஷ்டிரர் மிருதுவான சுபாவமும், தயை, தர்மம், ஸத் யம், சூரத்தன்மை முதலிய குணங்களும் உடையவரானபடி யாலும், நீர் அவருக்கு பெரியோ ரானபடியாலும், நீர் செய்து வந்த உபத்திரங்களைப்பொறுத்து வந்திருக்கிருர். இராஜ்யம் ஆளு கிறவன் பண்டிதனுக இருக்க வேண்டும். அந்த குணம் பாண்ட வர்களிடத்தில் இருக்கிறது. உம் முடையபுத்திரர்களிடத்திலில்லை. அப்படியிருக்க, துரியோதனன், சகுனி, கர்ணன், துச்சாஸனன் இவர்களிடத்தில் இராஜ்யத்தைக் கொடுத்து நீர் எவ்வாறு க்ஷேமத் தை அடைய விரும்புகிறீர்?''

இனி விதுரர் செய்யும் உப தேசங்கள்.

பரமாத்மாவை அறிதல், நல்ல முயற்சி, பொறுமை, நித்யம் தர் மத்தை அனுஷ்டித்தல், இவை கள் எவனை புருஷார்த்தத்தில

ருந்து நழுவச் செய்யவில்லேயோ, அவனே அறிவாளியாவான், (அதாவது, இவைகள்தாம் ஜன்மாவை அடைந்ததற்கு பயன் எனக் கருத்து.)

பண்டிதன் நல்ல காரியங்களைச் செய்வான், கெட்ட காரியங்களைச் செய்யமாட்டான். நாஸ்திகத் தன்மையில்லாதவனுயும் சிரத்தையுள்ளவனுயும் இருப்பான்.

அறிவாளிகளான மனிதர்கள் தம் சக்திக்கு ஏற்றவாறு காரியங்களைச் செய்ய விரும்புகிருர்கள். தம் சக்திக்குத் தக்கவாறு காரியங்களைச் செய்யவும் செய்வார்கள். சிறிதளவு கூட யாரையும் அவமதிக்கமாட்டார்கள்.

அறிவாளிகளான மனிதர்கள் கிடைப்பதற்கரிதான பொருளில் ஆசை வைப்பதில்லே. நஷ்டமான பொருளேக் குறித்துத் துயரத்தை அடைவதுமில்லே. ஆபத்துக்கள் வந்த போதிலும் கலங்குவதில்லே.

அறிவாளிகளான மனிதர்கள் பெரியோர்கள் செய்து வந்த காரியங்களைச் செய்ய ஆசைப்படுவார்கள். ஸம்பத்துக்களே உலகத்துக்கு அளிக்கும் நல்ல கர்மங்களேயும் செய்வார்கள். நன்மையை உபதேசிப்பவர்களிடம் பொருமைப்படமாட்டார்கள்.

தன்னே யாராவது பூஜித்தால் அதற்காக சந்தோஷப்படுவதில்லே. அவமதித்தாலும் தாபத்தை அடைவதில்லே. கங்கையின் மடுவைப்போல்எவன் கலக்கமடையாமல் இருக்கிருனே, அவனே அறிவாளி எனச் சொல்லப்படுவான்.

எந்த மனிதன் தடங்கலில்லாத சொற்களே உடையவனே, ஆச்சரியமான கதைகளேக் கூறுவானே, விஷயங்களே ஊஹத்தால் அறிவானே, மென்மேலும் புதிது புதிதாக யோசனே கூறுவானே, நூல்களிலுள்ள விஷயங்களே உடனுக்குடன் ஸபையில் சொல்லுவானே, அவனே அறிவாளியெனப்படுவான்.

எவனுடைய சாஸ்திர பயிற்சியானது அறிவை வளரச் செய்கிறதோ, எவனுடைய அறிவானது சாஸ்திரத்தைவிட்டு விலகாமலிருக்கிறதோ, பெரியோர்களுடைய ஆசாரம் முதலியவற்றை எவன் விட்டுவிடாமல் பாதுகாத்து வருகிருனே, அவனே அறிவாளியெனப்படுவான்.

எவன் படிக்காமலே கர்வத்தை அடைகிருனே, எவன் தரித்ரனுக இருந்தும் ஊதாரியாக இருக்கிருனே, வேலே செய்யாமல் சோம்பேறியாக இருந்துகொண்டு பொருளே சம்பாதிக்க ஆசைப்படுகிருனே, அவனே புத்திமான்கள் மூடன் எனச் சொல்வார்கள்.

எவன் தன் தர்மத்தை விட்டுவிட்டுப் பிறருக்குத் தர்ம காரியங்களே நடத்திவைக்கிருனே, எவன் ஸ்நேஹிதன் விஷயத்தில் பொய் பேசிக் கபடமாக நடக்கிருனே, அவன் மூடன் எனப்படுகிருன்.

தன்னிடத்தில் அன்பில்லாதவர்களிடம் எவன் ஸ்நேஹம் செய்ய விரும்புகிருனே, அன்புள்ளவர்களே விட்டுவிடுகிருனே, பலசாலியை துவேஷிக்கிருனே, அவன் மூடனெனப்படுவான்.

எவன் சத்ருவை ஸ்நேகிதனுகச் செய்துகொண்டு ஸ்நேஹிதனே துவேஷித்துத் துன்புறுத்துகிருனே, கெட்ட காரியங்களேயும் செய்யத் தொடங்குகிருனே, அவனே மூட புத்தியுள்ளவன் எனக் கூறுகின்றனர்.

எவன் காரியங்களே நீட்டித்துச் செய்கிருனே, எவன் எல்லா காரியங்களிலும் ஸந்தேஹப்படுகிருனே, உடனே செய்யவேண்டியதைத் தாமதித்து ஆரம்பிக்

கிருனே, அவனை மூடனெனக் கூறுகின்றனர்.

எவன் பித்ருகளுக்கு சிராத்தத்தைச் செய்வதில்லையோ, குல தெய்வம் முதலிய தேவர்களை ஆராதிப்பதில்லையோ, நல்ல மனமுடைய மனிதனை ஸ்நேஹிதனுகச் செய்து கொள்ளவில்லையோ, அவனை மூட புத்தியுள்ளவனுக மஹான்கள் கூறுகின்றனர்.

எவன் அழைக்காமல் பிறர் வீட்டிற்கு அடிக்கடி செல்லுகின்ருனே, தன்னைக் கேளாமல் இருப்பவனிடம் தானுகவே பல விஷயங்களை கூறுகின்ருனே, அவனை மூட புத்தியுள்ள கீழ்பட்ட மனிதன் எனக் கூறுகின்றனர்.

தான் தப்பு செய்கிறவனுய் இருந்துகொண்டு தப்பு செய்யும் பிற மனிதனை எவன் குறை கூறுகிருனே, எவன் தான் சக்தியற்றவனுய் இருந்தும் கோபமடைகிருனே, அவன் மிகுந்த முட்டாள் எனப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

தனது சக்தியை அறியாமல், தர்மம் அர்த்தம் இவைகளற்ற, கிடைக்கக் கூடாத பொருளை முயற்சி செய்யாமலே அடைய எவன் விரும்புகிருனே, அவனை மூட புத்தியுள்ளவன் என இவ்வுலகில் கூறுகின்றனர்.

எவன் தனக்கு சிஷ்யனுக இல்லாதவனைத் திருத்துகிருனே, அவ்வாறே சிஷ்யனைத் திருத்தாமல் இருக்கிருனே, தான்கூடத்தனது பொருளை அனுபவிக்காத லோபியை எவன் உபாஸிக்கிருனே, அவனை மூட புத்தியுள்ளவன் எனக் கூறுகின்றனர்.

எவன் நிரம்பப் பொருளை அடைந்தும், அதேபோல் கல்வியையும்அதிகாரத்தையும் அடைந்தும், கர்வமில்லாமல் உலகில் பழகுகிருனே, அவன் பண்டிதன் எனக் கூறப்படுகிருன். ○



கர்வத்தால் கேடு அடைந்த தேவர்கோமான்

ஸ்ரீவித்யா மார்த்தாண்ட
பிரம்மஸ்ரீ
**C. V. ஸ்வாமி
சாஸ்திரிகள்**

அன்னை பராசக்தியின் மாஹாத்மியங்களை மேலும் விரிவாகக் கேட்பதற்கு வேட்கை கொண்ட அகஸ்தியரை நோக்கி, மஹா விஷ்ணுவின் அம்சமாகத் தோன்றிய ஹயக்ரீவர் சொன்னார்:

முன்னொரு காலத்தில் துர்வாஸ மகரிஷியானவர், புழுதி யேறிய திருமேனியில் கந்தலான தோலாடைகளைப்புனைந்தவராய், பைத்தியக்காரனைப் போல் ஆகாய மார்க்கத்தில் சென்று கொண்டு இருந்தார்.

அப்போது, பேரெழில்வாய்ந்த ஒரு வித்யாதர மங்கை, அவர் எதிரே வந்து வணங்கி நின்றாள். அவள் கையில் ஒரு தெய்விகமான மலர்மாலை காட்சியளித்தது.

உடனே மகாத்மாவான துர்வாஸர் அந்த மங்கையைப் பார்த்து, ''நீ எங்கிருந்து வருகிறாய்? எங்கே செல்கிறாய்? இந்த மாலை உனக்கு எப்படிக் கிடைத்தது?'' என்று வினவினார்.

''முனிவர் பெருமானே! நான் ஸ்ரீ பரதேவதையை நோக்கி நெடுங்காலம் தவம் புரிந்தேன்.

என் தவத்திற்கு இரங்கி, அம்பிகை எனக்குக் காட்சி கொடுத்து அனுக்கிரகம் செய்தாள். அத்துடன் தன் கழுத்தில் அணிந்திருந்த இந்த மாலையையும் எனக்குக் கொடுத்தாள்'' என்று கூறினுள் அந்த மங்கை.

''அப்படியானல், அந்த மாலையை எனக்குக் கொடு'' என்று கேட்டார் துர்வாஸர்.

வித்யாதர மங்கை மிகவும் மகிழ்ச்சியோடு அந்த மாலையை துர்வாஸருக்குக் கொடுத்தாள். அவர் அதை மிகவும் பயபக்தியோடு வாங்கித் தன் தலைமேல் வைத்துக் கொண்டார்.

அவர் சொன்னர்: ''பெண்ணே! பிரம்மாதி தேவர்களாலும் பெறற்கு அரிதாகிய இந்த மாலையை, என்னுடைய மகத்தான பாக்கியத்தால் உன்னிடமிருந்து நான் கிடைக்கப் பெற்றேன். உனக்கு அந்தப் பரதேவதையினிடத்தே என்றும் இடையருத பக்தி ஏற்படுமாறு ஆசீர்வதிக்கிறேன். உனக்கு மேலும் பல மங்களங்கள் உண்டாகுமாக!''

இந்திரன் அப்போது கைலாச பர்வதம்போல் விளங்கும் ஐராவதத்தின் மீது ஏறி, மிகவும் செருக்கோடு பவனி வந்து கொண்டு இருந்தான். துர்வாஸர் அவனிடத்தில் சென்று, தாம் வித்தியாதர மங்கையிடமிருந்து பெற்ற அந்த தெய்விகமான மலர் மாலையை, அவனுக்கு அன்போடு அளித்தார்.

இந்திரன் அதை அலட்சியமாக வாங்கி, தான் அமர்ந்திருந்த பட்டத்து யானையாகிய ஐராவதத்தின் பிடரிமேல் வைத்தான்.

ஐராவதம் உடனே அந்த மாலையைத் தன் துதிக்கையால் எடுத்துத் தரையில் போட்டுக் காலால் தேய்த்தது.

இதைக் கண்ட துர்வாஸர் கடுஞ்சினம் அடைந்தார்.

''ஹே இந்திரா! பிரம்மா விஷ்ணு சிவன் என்னும் திரிமூர்த்திகளாலும் பூஜிக்கப்படுபவளான அந்த மகாதேவி அணிந்திருந்த மாலையை, உனக்கு நான் கொடுத்தேன். அதை நீ உரிய மரியாதையுடன் வாங்கித் தலையில் சூடிக் கொள்ளாமல், மிகவும் அலட்சியமாக வாங்கி உன் யானையினது கழுத்தின்மேல் வைத்தாய். அந்த யானையும் அதைக் காலால் மிதித்து உருத்தெரியாமல் ஆக்கிவிட்டது. 'மூன்று உலகங்களுக்கும், அவற்றில் வாழும் தேவர்கள், அசுரர்கள், மனிதர்கள் ஆகிய அனைவருக்கும் நாம் அதிபதியாக இருக்கிறேம்!' என்ற உன் கர்வம் அல்லவா இதற்குக் காரணம்? அந்த கர்வத்துக்கு ஹேதுவான அனைத்தும் தம்சோபையை இழந்து விளங்காமல் போகட்டும்!'' என்று சபித்துவிட்டுச் சென்றூர் துர்வாஸர்.

உடனே அதுகாறும் இந்திரனது வெற்றிக்கெல்லாம் காரணமாயிருந்து வந்த விஜயஸ்ரீ என்னும் சக்தியானது, அவனை விட்டு விலகிச் சென்று அசுரர்களை அடைந்தது. அவனது அழிவில்லாத ஐஸ்வர்யங்களுக்கெல்லாம் காரணமாயிருந்த நித்யஸ்ரீ என்னும் சக்தியானது, அவனை விட்டு

விலகிச் சென்று பரமாத்மாவான வாசுதேவனே அடைந்தது. இந்திரன் மிகவும் துக்கத்தை அடைந்தவனுய், சூழ்ந்து நின்ற தேவர்களுடன் தன் தலைநகர் போய்ச் சேர்ந்தான்.

•

தேவலோகத்தில் அமங்கலமான பல துர்நிமித்தங்கள் தோன்றலாயின. அவற்றைக் கண்டு மனங்கலங்கிய தேவேந்திரன், தன் குலகுருவாகிய பிருகஸ்பதியை அழைத்துவரச் செய்து, அவர் காலில் வீழ்ந்து வணங்கி, பின்வருமாறு பேசினுன்:

''குருதேவா! தாங்கள் எல்லா தருமங்களேயும் உணர்ந்தவர். முக்காலங்களிலும் நடக்கக் கூடியவற்றை அறிந்தவர். இதற்கு முன் எப்போதுமே கண்டிராத சில துர்நிமித்தங்களே இப்போது நான் காண்கிறேன். இவற்றிற்குப் பலன் என்ன? இவற்ருல் ஏற்படக் கூடிய ஆபத்திலிருந்து மீளுவதற்கு, நான் எந்த விதமான உபாயத்தைக் கையாள வேண்டும்?''

தேவேந்திரனுடைய இந்தக் கேள்விகளுக்கு பிருகஸ்பதி என்ன பதில் கூறினுர் என்பதை, நாம் அடுத்த இதழில் காண்போமாக!

○



அனைவருக்கும்
ஆனந்தம் அளிப்பது
காளி
மார்க்
காளி மார்க்
Kali mark
ஸ்டுடியோ 'செட்'டில்
அனைவரையும்
ஆட்டிவைக்கும்
டைரக்டரையும்
ஆட்கொள்வது
காளிமார்க் பானம்.
ஆயிரக்கணக்கானவர்கள்
காளிமார்க்கின் குளிர்ந்த,
புதுமை மாறாத, ருசியை
அனுபவிக்கின்றனர்.
நீங்களும் உங்கள் தாகம்
தணிய காளிமார்க்
பானங்கள் அருந்துங்கள்.
50 ஆண்டுகளாகப் புகழ் பெற்றவை. எங்கும் கிடைக்கும்.

சத்தியத்தின் உயர்வு



திருமுருக

கிருபானந்தவாரியார்

அணிகலனை யாரும் விரும்புவார்கள். ஆனால் இப்போது நல்ல தங்கத்தில் அணிகலன் தயாரிக்க முடியாது. தயாரித்தாலும், அதற்குக் கள்ளர் முதலியவர்களால் ஆபத்து உண்டு.

ஆபத்தில்லாத சில அணிகலன்கள் உண்டு.

கண்ணுக்கு அணிகலன் — கண்ணோட்டம்.

காதுக்கு அணிகலன் — நல்ல கேள்வி.

கைக்கு அணிகலன் — தான தர்மம்.

மனத்துக்கு அணிகலன் — தூய சிந்தனை.

வாக்குக்கு அணிகலன் — சத்தியம்.

சத்தியமே நித்தியம்; மற்றவெல்லாம் அநித்தியம்.

''பொய்யாமை பொய்யாமை
யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை
நன்று'' —திருவள்ளுவர்.

சத்தியத்துக்காக ஒரு மன்னவன் மனைவியை விற்றான். மகனை விற்றான். தன்னையும் விற்று விட்டான். 12 ஆண்டுகள் மாநிலம் காத்த அம்மன்னர் மன்னன் மயானங்காத்தான். பட்டுப் பீதாம்பரம் உடுத்த இடையில், பிணத்தின் மேல் இட்ட சல்லாத் துணியை உடுத்தான். தெள்ளமுதம் உண்ட திருவாயில் வாய்க் கரிசியைப் பொறுக்கியுண்டான்.

ஓமப்புகைப் பட்ட திருமேனி ஈமப்புகைப்பட்டுக் கறுத்தது. செங்கோல் பிடித்த திருக்கரத்தில் பிணக்கோல் பிடித்தான். சிங்காதனத்திலிருந்தவன் எலும்புக் குவியலின் மீது இருந்தான்; என்னே உறுதி?

பொய் சொல்லக் கூடாது என்ற ஒரு கொள்கைக்காகத் தான் இத்தனை துன்பங்கள் நேர்ந்தன.

அடிமையான சந்திரமதி, பஞ்சு படாத பாடுபட்டாள். அரவந் தீண்டி மாண்ட மைந்தனை மயானத்தில் சிதை அடுக்கிக் கொளுத்த முயன்றாள்.

நள்ளிரவு. மனைவியென்றறியாத மன்னன் சிதையை உதைத்தான். ''ஆரடி கள்ளி! இங்கு ஒரு பிணத்தைச் சுடுவதாயின் காற்பணமும் முழத்துண்டும் பிடியரிசியும் தரவேணும். அவை என் எஜமானுக்கு உரியவை'' என்றான்.

கணவன் என்றறியாத அம்மாதரசி ''அண்ணா! அண்ணா! உதைக்காதே. உலகாளப் பிறந்த உத்தம சீலன். கடவுள் சாட்சியாக என்பால் ஒரு சல்லியும் இல்லை'' என்றாள்.

'ஏண்டீ பொய் புகல்கின்றாய்? கழுத்தில் மின்னும் தாலியை விற்றுக் கொடு'' என்றான்.

'அந்தோ! இத்திருமாங்கல்யம் அயோத்தியை யாளுகின்ற அரசர் பெருமானையன்றி மற்று யார்க்குந் தெரியாத தெய்விக முடைய தாயிற்றே! இச்சுடலை காக்கும் புலையன் கண்டானே!'' என்று அழுதாள் அம்மங்கை.

இதைக் கேட்ட அரிச்சந்திரன் சந்திரமதியோ என்று ஐயுற்றான். எரிகின்ற பிணத்தை அதிகமாக எரியவைத்து உற்றுப் பார்த்தான்

'சந்திரமதி! மாண்டது நமது தவக்குமாரனா?'' என்று கூறி அலறியழுதான்.

கணவன் என்றறிந்த அக்கற்புக் கரசி அவன் கால்மீது விழுந்து கண்கலுழ்ந்தாள்.

அப்பொழுது வந்தார் விசுவாமித்திரர்.

''அரிச்சந்திரா! ஒரு பொய் சொல். மனைவியை மீட்டுத் தருவேன். மகனை எழுப்பித் தருவேன். நாட்டையும் நகரையும் பொன்னையும் மணியையும் பொருளையும் பட்டம் பதவியையுந் தருவேன்'' என்றார்.

வேந்தன் அவரைக் கண்டு நகைத்தான். ''தவ முனிவரே! அவமொழி பகரமாட்டேன். நீர் இவ்வாறு கூறலாமோ?

''உடைந்த பானை வறுக்கும் ஏனமாகப் பயன்படும்; உடைந்த கண்ணாடி சுள்ளனைத் தடுக்க பின் பக்கம் சுவர் மீது வைக்க ஆகும். இறந்த மாட்டின் தோல் நீர் இறைக்கும் கபிலைக்கு ஆகும். அதன் கொம்பு தலைசீவ சீப்புக்கு ஆகும். இறந்த உடும்பின் தோல் கஞ்சிராவுக்கு ஆகும்; ஆட்டின் தோல், கைப் பையாக உதவும்; கிழிந்த ஆடை விளக்குத் துடைக்க ஆகும்; உடைந்த மரச் சாமான் அடுப்பெரிக்க ஆகும். இறந்த மனிதனுடைய உடம்பு எதற்கு ஆகும்? ஒன்றுக்கும் ஆகாது.

''குழம்பில் அகப்பையிட்டால் கெடாமல் இருக்கும். மனிதன் கைவைத்தால் ஊசிப்போகும். கைபட்டால் ஊறுகாய் புழுக்கும். பாயசம் நீற்றுப் போகும். அகப் பைக்கு இருக்கும் தகுதி கூட மனி தனின் கைக்குக் கிடையாது. நாறுகின்ற உடம்பு இது. உயிர் போனால் புலையனும் விரும்பான். இந்த உடம்பைப் பேணும் பொருட்டு, உயிரினும் உயர்ந்த சத்தியத்தை நான் விடுவேனா? ஒருபோதும் விடேன். விடேன். சந்திரன் வெதும்பினாலும் வெதும்புவான்; சூரியன் பனிக் கட்டிபோல் குளிர்ந்தாலும் குளிர்வான். கடல் திடலாகும். இந்த அரிச்சந்திரனுடைய நா பிறழாது''

புலையனும்விரும் பாதஇப்
புன்புலால் யாக்கை
நிலையெனுமருண் டுயிரினும்
நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தம சத்தியம்
பிறழ்வது தரியேன்.
கலையு ணர்ந்தநீ எமக்கிது
கழறுவ தழகோ?
பதியி ழந்தனம்; பாலனை
யிழந்தனம்; பெற்ற
நிதியி ழந்தனம்; இனிஎமக்
குண்டென நினைக்கும்
கதியி ழக்கினும் கட்டுரை
யிழக்கிலன் என்றான்.
மதியி ழந்தனன்; வாயிழந்
தருந்தவன் மறைந்தான்.

அரிச்சந்திரனுடைய உறுதியை யறிந்த விசுவாமித்திரர் மதியும் வாயும் இழந்து மறைந்தார்.

குழந்தையை இவள் கொன்றாள் எனக் குற்றம் சாட்டி, மன்னன் ஆணையால் இவளைக் கொல் என்று உத்தரவு வந்தது.

அரிச்சந்திரன் ''பெண்மணி? நீ வழக்கமாக வணங்குங் கடவுளை வணங்கிக் கொண்டு, கிழக்கு நோக்கி நில். உன்னை இவ் வாளால் வெட்டிவிட்டு, நீசென்ற உலகிற்கு யானும் வருவேன். இருவரும் அந்த உலகிலாவது நம் மைந்தனைச் சந்திப்போம். திருவருளைச் சிந்திப்போம்'' என்றான்.

அம்மாதரசி, ''நான் வழக்கமாக வணங்கும் தெய்வம் தாங்கள் தானே? உம்மையன்றி வேறு தெய்வத்தைக் கனவிலுங் கருதியறியேன்'' என்று வாள்தாங்கி நின்ற மன்னவனை வணங்கி நின்றாள்.

வழக்க மாகநீ வழிபடு
தெய் வத்தை வணங்கி,
கிழக்கு நோக்கிநீ இருவென;
கிளிமொழி மடந்தை
பழக்க மானஅக் கணவனைப்
பரவிஎன் னுவி
இழக்கற் கஞ்சிநீ அறம்வழு
வேல்என இயம்பும்.

அரிச்சந்திரன், தன்னையே தேற்றி உறுதியுடன் நின்ற உத்தமியின் கற்பின் திறத்தைக் கண்டு அதிசயித்தான். வாளை எடுத்தான். கீழ்வருமாறு கூறுகின்றான்.

''அகில உலகங்கட்கும் உயிர் கட்கும் தனிப்பெருந் தலைவன் சிவபெருமான் என்பதும், எண்ணிலாத புகழுடைய அப் பரமபதியின் திருவாக்கு வேதம் என்பதும், அவ்வேதத்தில் கூறிய அறம் பலவற்றுள்ளும் சத்தியம் சமானமில்லாத அறம் என்பதும், அந்தச் சத்தியத்தை அடியேன் விரதமாகக் கொண்டதும், சத்தியநெறி நின்று என்னை இவள் அனுசரித்ததும் உண்மையாயின், இவ்வாளினால் இவளுக்கு மரணம்

எய்தாது. இல்லையேல் மரணம் அடைக" என்று கூறி வாளை வீசினன். அவ்வாள் அறுப தாண்டு நிறைவுவிழாவில் இடு கின்ற மணமாலையாக விழுந்தது.

உலகு யிர்க்கெலாம் பசுபதி
ஒருமுதல் ஆயின்;

அலகில் சீருடை யவன்மொழி
மறையனின் அதன்கண்

இலக றம்பல வற்றினும்
வாய்மைஈ டிலதேல்,

விலகு றுமல்அவ் வாய்மையை
விரதமாக் கொளின்யான்

நெறியில் அன்னஎன் றனை
விடா நிறைஇவட் குளதேல்

இறுதி யின்மையைப் பெறுக
இல் லெனில்இவள் இறுதி

பெறுக என்றுவாள் வீசினன்;
பேதைதன் கழுத்தில்

மறும ணத்திடும் மாலையாய்
வீழ்ந்ததவ் வடிவாள்.

உடனே சிவபெருமான், உமா தேவியார், திருமால், திரு மகள், பிரம்மதேவர், கலைமகள் முப்பத்து முக்கோடி தேவர்கள், சித்தர்கள் எல்லோரும் தோன்றி ஞர்கள். உலகெலாம் அந்த சத்திய மன்னனை வாழ்த்தின.

"உள்ளத்தால் பொய்யா
தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்ற திருக்குறளுக்கு அவ் வேந்தன் இலக்கியம் ஆனன்.

அத்தகைய சத்திய நெறியில் நின்று, சத்திய சோதனை செய்து, சத்தியபீடத்து அமர்ந்து, சத்திய ஜோதியில் கலந்தவர் காந்தியடி கள்.

அகிம்சையில் பெரியவர் —
இராஜேந்திர பிரசாத்.

அரசியல் அறிவில் பெரியவர்—
நேருஜி.

கல்வியில் பெரியவர் —
மாளவியா.

சமய அறிவில் பெரியவர் —
ஆசாத்.

தீரத்தில் பெரியவர் —
படேல்ஜி.

ஆங்கில அறிவில்பெரியவர் —
சத்தியமூர்த்தி.

செல்வத்தில் பெரியவர் —
பிர்லா.

சத்தியத்தில் பெரியவர் —
காந்திஜி,

சத்தியத்தில் பெரிய காந்தி யடிகளுக்கு மற்ற எல்லாவற் றிலும் பெரியவர்கள் சீடர்களாக ஆனர்கள்.

இதனல் சத்தியத்தின் உயர்வு தெரிகின்றதல்லவா? எங்கும் சத்திய நெறி ஓங்குக. எல் லோரும் சத்தியத்தைக் கடைப் பிடிக்கட்டும். வாழ்க சத்தியம்! வளர்க சத்தியம்!!

○

[பிரம்மஶ்ரீ பி. என். பட்டாபிராம சாஸ்திரி அவர்கள், நமது பாரத தேசத்தில் உள்ள தலைசிறந்த சம்ஸ்கிருத பண்டிதர்களில் ஒருவர். வித்யா சாகரர், சாஸ்திர ரத்னாகரம், வித்யா வாசஸ்பதி போன்ற பெருமைக்கு உரிய விருதுகளைப் பெற்றவர். காசியில் உள்ள சம்ஸ்கிருதப் பல்கலைக் கழகத்திலே பேராசிரியராகவும், சாகித்தியத் துறையின் தலைவராகவும் பணியாற்றி வருபவர். நமது சிந்தனைக்கு விருந்தாக அமைந்துள்ள அவரது கட்டுரையை, அன்பர்கள் படித்து மகிழ்வார்களாக!—ஆசிரியர்]

சமுதாயமும் தனிப்பட்ட மனிதனும்

வித்யா வாசஸ்பதி

ஸ்ரீ பி. என். பட்டாபிராம சாஸ்திரிகள்

நமது முன்னோர்கள் ''உயிர் வாழ்வதற்கே உணவு'' என்னும் கொள்கையுடன், காய் கனி கிழங்குகளையே உண்டு மன நிறைவு பெற்றவர்கள். அவர்கள், நாம் சுகமாக வாழும் பொருட்டு, ஸமாஜம் அல்லது சமுதாயம் என்று சொல்லப்படுகிற ஓர் அழகான கட்டடத்தை அமைத்துத் தந்தார்கள்.

கட்டடம் என்றால், அதற்குச் செங்கல், கலவை, சுண்ணாம்பு இவைதாம் முக்கியமான தேவைகள். தனிப்பட்ட செங்கற்களை ஒன்று சேர்க்கக் கலவை தேவைப்படுகிறது. ஒன்று சேர்த்த பிறகு அவற்றை திடப்படுத்தப் பூச்சுக் கலவை தேவைப்படுகிறது. பூசின பிறகு அதை அழகுபடுத்தச் சுண்ணாம்பு சாதனம் ஆகிறது.

இதே மாதிரி, நம் முன்னோர்கள் எழுப்பிய ஸமுதாயம் என்ற கட்டடத்திற்கு, அர்த்தம், காமம் என்னும் இரண்டு புருஷார்த்தங்களும் செங்கற்களாக அமைந்துள்ளன. அர்த்தம் என்றால் பொருள். காமம் என்றால் இன்பம். இவ்விரண்டையும் ஒன்று சேர்க்க, அறம் எனப்படுகிற தருமத்தைக் கலவையாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

அந்தத் தருமத்திலும் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று சாமான்ய தருமம்; மற்றொன்று, விசேஷ தருமம். தருமம் என்றால் கடமை. உலக வாழ்க்கையில் கடமை என்பது தவிர்க்க முடியாதது. ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் அமைந்துள்ள கடமைகளை விசேஷ தருமங்கள் என்றும், சமூக அடிப்படையிலான கடமைகளை சாமான்ய தருமங்கள் என்றும், சாஸ்திரங்கள் வேறுபடுத்திக் கூறுகின்றன.

சமுதாயம் என்ற கட்டடத்துக்கு, இந்த இருவகைத் தருமம்

களும் இரு வகையான கலவை களாய்ப் பயன்படுகின்றன. ஒரு கலவை அர்த்தம், காமம் என்னும் செங்கற்களை ஒன்று சேர்க்கிறது. மற்றொரு கலவை அவற்றைப் பூசித் திடப்படுத்துதற்குப் பயன்படுகிறது. அதற்கும் மேலே கட்டடத்தை அழகு படுத்துவதற்கு, மோட்சம் அல்லது வீடு என்னும் நான்காவது புருஷார்த்தம், நம் முன்னோர்களால் சுண்ணும்பாகக் கையாளப்பட்டது.

இவ்வாறு நான்கு புருஷார்த்தங்களையும் சாதனங்களாக வைத்துக் கட்டப்பட்ட மாளிகையே நம் பாரத சமுதாயம் எனப்படுவது.


ஒரு கட்டடத்தை எழுப்புவது கடினம். ஆனால் அதை இடிப்பது சுலபம். அதேபோல், சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்வது கடினம். ஒற்றுமையின்றித் தனித்தனியாகப் பிரிந்து செல்வது எளிது. தருமத்தைப் புறக்கணித்து விட்டு, பொருளையும் இன்பத்தையுமே நாடி நிற்கும் மனப்பான்மை படைத்தவர்களால், மற்றவர்களோடு ஒரு நாளும் ஒன்றுபட்டு வாழ முடியாது.

அர்த்தமும் காமமும் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பவை அல்ல. அவை ஏற்றத் தாழ்வுகளோடு கூடியவை. ஆனால் தருமமும் மோட்சமும் என்றும் ஒரே ரீதியாக இருப்பவை. ஆகையால், அவற்றை நிரதிசயமான புருஷார்த்தங்கள் என்று சொல்லுகிறோம்.

தருமம் என்ற பெயரால், சாஸ்திரங்கள் கடமையைத்தான் குறிப்பிடுகின்றன. மோட்சம் என்பது கடமையின் இலட்சியம். எதை அடைந்து விட்டால் அதன் பிறகு இன்னொன்றை அடைய வேண்டிய அவசியம் இராதோ, அதையே இலட்சியம் என்று சொல்லுகிறோம். இந்த இலக்கணத்தின்படி பார்த்தால், அர்த்தமும் காமமும் மனித வாழ்க்கையின் இலட்சியங்கள் ஆகிவிட முடியாது. ஏனென்றால், அவற்றை அடைந்த பிறகும் கூட, மனித உள்ளம் திருப்தி அடைவதில்லை!

மனிதன் 'உயிர் வாழ்வதற்காக உணவு' என்னும் கொள்கையை விட்டு, உணவுக்காக உயிர் வாழ்வது என்னும் கோட்பாட்டைக் கடைப்பிடிக்கத் தொடங்கியதனால்தான், உலகில் உணவுப் பஞ்சமே ஏற்படலாயிற்று. உணவு கிடைக்காதவர்கள் கிளர்ச்சி செய்ய முன் வருவது இயல்பே அல்லவா?

கிளர்ச்சிகளை அடக்குவதற்குக் கத்திகளும் துப்பாக்கிகளும் அவ்வளவாகப் பயன்படமாட்டா. தனிப்பட்ட மனிதன் தன்னை நற்குணம் உள்ளவனாக ஆக்கிக் கொள்வதுதான், உலகில் கிளர்ச்சிகளையும் கலகங்களையும் ஒழிப்பதற்கான ஒரே வழியாகும். ஒருவன் தன்னை நற்குணவானாக ஆக்கிக்கொள்ள வேண்டுமானால், அவன் அறநெறியில் வழுவாது நின்று, அர்த்தத்தையும் காமத்தையும் தேடிக்கொள்ள வேண்டும். தனிப்பட்ட மனிதர்கள் இவ்வாறு தருமத்தைப் பாதுகாத்து ஒழுகுவார்களாயின், நம் தேசமும் சமுதாயமும் சின்னபின்னம் ஆகாமல் செழித்தோங்கி வாழும், நம் மக்களுக்கு அத்தகைய பரிபக்குவம் ஏற்படுமாறு, பகவான் அருள்புரிவாராக! ○



நச்சுப் பொய்கை

ஆர். முத்துக்கிருஷ்ண சாஸ்திரிகள்

கேள்வி: நாம் செல்ல வேண்டிய மார்க்கம் எது ?

பதில்: தர்மத்தின் தத்துவம் குஹைக்குள் வைக்கப் பட்டிருக்கிறது. அதாவது, அது எளிதில், புலப்படுவதில்லை. 'இது தர்மம்,' 'இது அதர்மம்' என நம் புத்தியால் ஊகிக்க முடியாது. ஏனென்றால், நம்முடைய ஊகம் நிலையற்றது. நாம் ஒருவிதமாக ஊகித்தால், வேறுசில மேதாவிகள் வேறுவிதமாக ஊகிக்கலாம். வேதங்களும் பலவிதமாகக் காணப்படுகின்றன. ரிஷிகளும் பலர் பலவாருகவும் கூறியிருக்கின்றனர். ஆதலால், அறிஞர்கள் எந்த மார்க்கமாகச் செல்லுகின்றனரோ, அதுவே நாம் செல்லவேண்டிய சிறந்த மார்க்கம்.

கேள்வி: உலகில் பிரதிதினம் நடைபெறும் செய்தி என்ன ?

பதில்: காலன் என்ற புருஷன், அறியாமை என்ற பாத்திரத்தில், இரவு பகல் என்ற விறகில், சூரியன் என்ற நெருப்பைவைத்து எரியவிட்டு, மாஸம், ருது என்ற கரண்டியால் புரட்டிப் புரட்டிப் போட்டு எல்லாப் பிராணிகளையும் வறுத்தெடுத்துக்கொண்டிருக்கிருன் என்பதே, உலகில் பிரதிதினம் நடைபெறும் செய்தி.

கேள்வி: எவன் ஜீவித்திருப்பவனுகக்கருதப்படுவான்?

பதில்: புண்ணிய கர்மாக்களைச் செய்வதால் ஒருவனுடைய புகழ், பூமியிலும் தேவலோகத்திலும் வியாபிக்கின்றது. எவ்வளவு நாள் வரை ஒருவனுடைய புகழ் நிலைத்திருக்கின்றதோ, அவ்வளவு

நாள் வரை அவன் ஜீவித்திருப்பவனுகக் கருதப்படுகின்ருன். அவனே புருஷன் என்றும் கூறப்படுவான்.

கேள்வி: எல்லாப் பொருள்களையும் பெற்று எல்லாக் காமங்களையும் அடைந்தவன் எவன்?

பதில்: பிரஹ்ம சாக்ஷாத்காரம் செய்தவனே எல்லா பொருள்களையும் பெற்று எல்லா காமங்களையும் அனுபவிப்பவன் ஆவான். அவன் சுகம், துக்கம், பிரியம், அப்பிரியம், சென்றது, வரப்போவது எல்லாவற்றையும் சமமாகக் கருதுவான்.

இவ்வளவு கேள்விகளுக்கும் சரியான பதிலை உரைத்த தருமபுத்திரரை மெச்சி, "இவனுக்கு தர்மத்தின் அறிவு பூர்ணமாக இருக்கின்றது. தர்மத்தில் இவனுடைய சொந்த நிலை எவ்வாறு இருக்கின்றது என்பதை பரீக்ஷிக்க வேண்டு"மெனக் கருதி, "இங்கு இறந்து கிடக்கும் உன் சகோதரர்கள் நால்வர்களுள் நீ யாரை விரும்புகின்ருயோ, அவன் இப்பொழுது பிழைப்பான். யாரை நீ விரும்புகின்ருய்?" என அந்த யக்ஷன் தர்மபுத்திரரை நோக்கி வினவினுன்.

தருமன்: இதோ கருத்த உடலுடனும், சிவந்தகண்களுடனும், விரிந்த மார்புடனும், நீண்ட கைகளுடனும் கிடக்கின்ருனே, அந்த நகுலன் பிழைத்தெழுந்திருக்கட்டும்.

யக்ஷன்: பதினுயிரம் யானை பலமுள்ள பீமனையும், நிகரற்ற வில்லாளியுமான அர்ஜுனனையும் விட்டு, உன் சிறிய தாயின் மகனை நகுலன் பிழைக்கட்டும் என நீ கூறுவதற்குக் காரணம் யாது?

தருமன்: மற்ற எல்லாதருமங்களையும்விட, தயையுடன் அனைவரையும் சமமாகப் பாவித்தல் என்பதே சிறந்த தர்மமாகும். தர்மத்தை நாம் அழித்தால், அதாவது அதை நாம் சரிவர அனுஷ்டிக்கவில்லையேல், அது நம்மை அழித்துவிடும். தர்மத்தை நாம் இரக்ஷித்தால், அதாவது சரிவர அனுஷ்டித்தால், அது நம்மைக் கட்டாயம் இரக்ஷிக்கும். ஆதலால் தர்மத்தை நான் ஒருபொழும் கைவிடுவதில்லை. என் தாயாராகிய குந்தியின் பிள்ளைகள் மூவருள், நான் ஒருவன் பிழைத்திருக்கிறேன். மாத்ரியன் பிள்ளைகளுள் ஒருவன் பிழைத்தால், குந்தீ—மாத்ரீ இருவரும் பிள்ளைகள் உள்ளவர்களாக ஆவர். நான் குந்தீ-மாத்ரீ இருவரையும் சமமாகப்பாவிப்பவன். ஒருவருடைய பிள்ளைமட்டும் பிழைத்திருந்து, மற்றவளுக்குப் பிள்ளையில்லாமல் இருக்க நான் சகிக்கமாட்டேன்.

யக்ஷன்: இவ்வாறு உன் மனம் தர்ம நெறி தவருமல் இருப்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆதலால் உன் சகோதரர்கள் நால்வருமே பிழைத்து எழுந்திருக்கட்டும்.

உடனே பீமன், அர்ஜுனன், நகுலன், ஸஹதேவன் என்ற நால்வரும் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவர்கள் போல எழுந்திருந்து, பசி தாக மற்று முகமலர்ச்சியுடன் காட்சியளித்தனர்.

பிறகு அந்த யக்ஷனைப் பார்த்து தரும புத்திரர், "ஐயா! தாங்கள் யார்? எட்டு வஸுக்கள், பதினேரு ருத்ரர்கள் இவர்களுள் ஒருவரா? அல்லது ஏழு மருத்தேவதைகளுக்குத் தலைவரா? அல்லது தேவேந்திரனு? லக்ஷக்கணக்கான எதிரிகளை

எதிர்த்துப் போர் புரியும் திறமை யுள்ள என் சகோதரர்கள், திடீரெனக் கீழே வீழ்த்தப்பட்டார்கள். இப்பொழுது முகமலர்ச்சியுடன் எழுந்திருந்து விட்டார்கள். "தாங்கள் எங்களுடையபிரிய நண்பரா? அல்லது எங்களது தந்தையா?'' என்றெல்லாம் வினவினர்.

அதற்கு யக்ஷனின் பதில்:— அப்பா! நான் உன் தந்தையான தர்மதேவதை. உன்னைப் பற்றி நன்கு அறிந்துகொள்ள விரும்பி இவ்விடம் வந்தேன். புகழ், தபஸ், ஸத்யம், அடக்கம், நல்லொழுக்கம், கபடமின்மை, லஜ்ஜை, தைரியம், அஹிம்ஸை, பிருஹ்மசர்யம் இவையெல்லாம் என் உடல்கள்.

அஹிம்ஸை, அனைவரையும் சமமாக நோக்குதல், சாந்தி, தபஸ், நல்லொழுக்கம், அசூயையின்மை இவையெல்லாம் என்னை அடைவதற்குச் சிறந்த சாதனங்கள். இவையெல்லாவற்றுடன் விளங்கும் உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன்.

ஆத்ம ஞானத்திற்கு சாதனமென வேதங்களில் கூறப்பட்டுள்ள "சமம், தமம், உபரதி, பொறுமை, ஸமாதானம் என்ற ஐந்திலும் தெய்வாதீனமாய் ஈடுபட்டிருக்கின்றாய்.

சமம்—மனத்தை அடக்குதல். தமம்—மற்ற புலன்களையடக்குதல், உபரதி—விஷயங்களிலிருந்து ஒழிவடைதல், ஸமாதானம்-மனத்தை ஒரே இடத்தில் நிலைநிறுத்துதல். தெய்வாதீனமாக ஆறு பதங்களையும் ஜயித்துவிட்டாய். பசி—தாகம், சோகம்—மோஹம், ஜரை—மிருத்யு என்ற ஆறும் பதங்கள் எனப்படும். இந்த ஆறும் எல்லாப் பிராணிகளையும் வந்தடைவதால், இவற்றிற்குப் பதங்கள் எனப்பெயர். இதுதான் ஷட்பதீ என இங்கு குறிப்பிடப்படுகிறது. இவற்றுள் பசி—தாகம் என்ற இரண்டும், பிறந்தவுடனேயே ஏற்படுகின்றன. சோகம் - மோஹம் என்ற இரண்டும், நடுவயதில் ஏற்படுகின்றன. ஜரை — மிருத்யு இவ்விரண்டும், முதிர்ந்த வயதில் உண்டாகின்றன. இந்த ஆறையும் ஸம்ஸாரமாகிற ஸமுத்திரத்தின் அலைகள் என்றும் கூறுவர். இவை யெல்லாவற்றையும் நீ ஜயித்துவிட்டாய். இவற்றால் உனக்கு எவ்விதத் தீங்கும் விளையாது என்பதைக்கண்டு, நான் மிகவும் மெச்சுகிறேன். ஆதலால் உனக்கு ஏதாவது வரம் அளிக்க விரும்புகிறேன். கேள்.

தருமர்: மான் எடுத்துச் சென்ற பிராம்மணருடைய அரணிக்கட்டை மறுபடியும் அவருக்குக் கிடைக்க வேண்டும்; இதுதான் முதல் வரம்.

யக்ஷன்: உன்னை பரீக்ஷிப்பதற்காக மான் வேடம் பூண்டு நான் தான் அதை எடுத்துச் சென்றேன். இதோ அதைத் தந்துவிடுகிறேன். வேறு உனக்காக ஒரு வரம் கேள்.

தருமர்: ஒருவரும் அறியாமல் வசிக்கவேண்டியபதின்மூன்றுவது வருஷம் இப்பொழுது நெருங்கிவிட்டது. அந்த சமயம் எங்களை யாரும் அறியாமல் இருக்கும்படி ஒரு வரம் அளிக்க வேண்டும்.

யக்ஷன்: என் அருளால் விராட நகரத்தில் யாரும் அறியாமல் நீங்கள் வசிப்பீர்கள். நீங்கள்

மாறுவேடம் தரிக்காமலிருந்த போதிலும், உங்களை யாரும் அறியமாட்டார்கள். இருந்தாலும் விரும்பினால் நீங்கள் எவ்வித வேஷத்தையும் தரித்துக் கொள்ளலாம். மற்றும் ஒரு வரம் கேள். இந்த வரத்தை அளித்ததால் மட்டும் நான் திருப்தியடைய வில்லை.

தருமர்: லோபம், மோஹம், கோபம் இவற்றை அறவே நான் வென்றுவிட வேணடும். தானம், தபஸ், ஸத்யம் இவற்றில் எப்பொழுதும் என் மனது ஈடுபட்டிருக்கவேண்டும்.

யக்ஷன்: இயற்கை யாகவே உன்னிடம் இந்த நற்குணங்கள் எல்லாம் அமைந்திருக்கின்றன. அவை அவ்விதமே நீடிக்கும்.

எனக் கூறிவிட்டு யக்ஷன் உருவங் கொண்ட தர்மதேவதை மறைந்தார். அரணிக்கட்டையையும் அவர்கள் அந்த பிராம்மணனுக்கு அளித்தனர். எல்லாத் துன்பங்களும் நீங்கி ஐவரும் சுகமாக ஆசிரமத்திற்குத் திரும்பினர்.

○

உங்களுக்கு உதவி நீங்களே !



புத்தர் பெருமான்

கருமிகள் தேவ உலகை அடைவதில்லை; மூடர்கள் ஈகையைப் போற்றுவதில்லை.

'நான்' என்பது உடல் அல்ல.

மண், தண்ணீர், நெருப்பு, காற்று—இவற்றின் மூலாம்சங்கள் இந்த உடலில் இருக்கின்றன.

உடலோடு வாழ்வதற்குச் சமமான துயரம் வேறெதுவுமில்லை.

இந்த உடலாகிய வர்ணம் பூசிய பொம்மையைப் பார்! இது புண்கள் நிறைந்தது; பிணிகளுக்கு இடமானது; பலவித எண்ணக் கலவைகளை உடையது; ஆனால் நிலையற்றது.

இந்த உடல், எலும்புகளைக் கொண்டு எழுப்பப்பட்ட கட்டடமாய், ஊனும் உதிரமும் கலந்து சாந்தாய்ப் பூசப்பட்டிருக்கிறது. இந்த மாளிகையிலே, மூப்பும் மரணமும், மமதையும், வஞ்சகமுந்தான் வசிக்கின்றன.

ஐயோ! வெகு சீக்கிரத்தில் இந்த உடலானது எரிந்து, உபயோகமற்றுப்போன மரக்கட்டை போல் உணர்ச்சியற்று, அருவருக்கப்பட்டு, மண் தரை மீது கிடக்கும்.

உங்களுக்கு உதவி நீங்களே!

முட்டாள்களின் துணை உதவியாகாது!

நல்ல வழியில் நன்கு நிர்வாகிக்கப்பட்ட நம்மனந்தான் நமக்கு மாபெரும் உதவி செய்யும். தாயோ, அல்லது தந்தையோ, அல்லது எந்த உறவினருமோ அவ்வளவு தூரம் உதவி செய்ய முடியாது.

உடலிலும் உள்ளத்திலும் பேச்சிலும் அமைதியுடன் எவன் ஒவ்வொரு வழியிலும் தன்னை நன்கு கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறானோ, எவன் இந்த உலகின் ஆசைகளை உதறித் தள்ளிவிடுகிறானோ, அவனே 'உபசாந்தி பெற்றவன்' என அழைக்கப்படுவான்.

எவனும் முதலில் தானே நல்ல நடத்தையில் நிலை பெற வேண்டும்; பிறகுதான் பிறருக்கு உபதேசிக்கப் புறப்பட வேண்டும்! இத்தகைய அறிஞன் கலக்க முறுவதில்லை.

நிந்தனை செய்யாதே; பிறருக்குத் தீமை செய்யாதே; அறநெறிக்குக் கட்டுப்பட்டு வாழ்; மிதமாகச் சாப்பிடு; ஏகாந்தமாய் உறங்கு; ஏகாந்தமாய் அமர்ந்திரு; எண்ணங்களை அலையவிடாமல் உயர்ந்த சிந்தனையத்தில் ஒருமைப்படுத்து.

இருட்டுத்தான் இந்த உலகின் இயற்கை. இங்கே வெகு சில பேரே உண்மையை ஊடுருவிக் காண முடியும்.

உலகத்தோடு நான் சச்சரவிட வில்லை; உலகந்தான் என்னோடு சச்சரவிடுகிறது.

ஒருவன் எதையாவது செய்ய வேண்டுமென்றால், அதைத் தளராத ஊக்கத்தோடும் உறுதியோடும் செய்யட்டும். சிரத்தையற்ற துறவியோ, தன் ஆசைப் புழுதிகளையே தன் மீது அதிகமாகத் தூவிக் கொள்கிறான்!

தீய எண்ணத்துடன் ஒருவன் பேசினாலும், செயலில் இறங்கினாலும், வண்டியை இழுக்கும் மாட்டின் காலை வண்டிச் சக்கரம் பின்பற்றிச் செல்வதுபோல, துன்பம் அந்த மனிதனைப் பின்பற்றிச் செல்கிறது.

தாமரை இலைமீது தண்ணீர் போலவும், ஊசி முனைமீது கடுகு போலவும், இன்பங்களில் ஒட்டிக் கொள்ளாமல் எவனிருக்கிறானோ அவனே பிராமணன் என்பேன்.

மனைவியிடம் மதிப்புக் காட்டுவது; ஆவலோடு இணங்கியிருப்பது; பரஸ்திரீயை நாடாதிருப்பது; மனைவியிடம் பொறுப்புக் கொடுப்பது; அவளுக்கு ஆடையணிகள் தருவது—இந்த ஐந்து வழிகளின் மூலம் மனைவியைக் கணவன் போற்றுதல் வேண்டும்.

மனைவி தன் கடமைகளைச் சரிவரச் செய்வது; தன் குடும்பத்தை நல்லபடி நடத்துவது; கற்பு கெடாதிருப்பது; கணவன் சம்பாதிப்பதைக் காப்பது; எல்லாவற்றையும் திறமையோடும் உற்சாகத்தோடும் செய்வது—இந்த ஐந்து வழிகளின் மூலம் தன் கணவன் மீதுள்ள வாஞ்சையைக் காப்பாற்றுகிறாள்.

நீ வடிக்கும் கண்ணீர் தான் பெரிது; நான்கு பெரும் கடல்களின் தண்ணீர் அல்ல!

காமத்திலிருந்து சோகம் பிறக்கிறது.

பிறப்பினால் மட்டும் ஒருவன் இழிந்த குலத்தவனாகி விடமாட்டான்; நடத்தையினால் தான் ஒருவன் இழிகுலத்தவனாகிறான்.

பிறரிடம் குறை கண்டுபிடிப்பது வெகு சுலபம்; ஆனால் தன் குற்றத்தைத் தானே அறிவது தான் வெகு சிரமம்.

பிறரின் குறைகளிலே நாட்டம் கொண்டு எப்போதும் புறம் கூறிக் கொண்டேயிருப்பவன் தன் குறைகளைத் தான் வளர விடுகிறான்.

மந்திரத்தின் குறை பாராயணம் செய்யாதிருத்தல்; வீட்டின் குறை பழுது பாராதிருத்தல்; அழகின் குறை சிரத்தையில்லாதிருத்தல்; காவலனின் குறை கவனமில்லாதிருத்தல்.

தீயவர்களோடு தோழமை வேண்டாம்; கயவர்களோடு கூட்டுறவு வேண்டாம்: ஒழுக்கமுள்ளவரோடு உறவாடுக; அறிவாளர்களின் சகவாசத்தைக் கைக்கொள்க.

முட்டாள்களின் கூட்டுறவு பகைவருடன் பழகுவது போல் எப்போதும் துயரந்தான். அறிஞர்களின் கூட்டுறவோ சுற்றத்தார்களோடு பழகுவதைப் போல எப்போதும் ஆனந்தம் தரும்.

தான் ஒரு குற்றமும் செய்யாதிருந்தும் தனக்குக் கிடைக்கும் நிந்தனையையும், அடிகளையும், சிறைத் தண்டனையையும் தாங்கிக் கொண்டு, சகிப்புத் தன்மையையே தன் சக்தியாகவும், பலங்களையே தன் சேனைகளாகவும் எவன் பெற்றிருக்கிறானோ, அவனையே பிராமணன் என்பேன்.

சிவ பக்தி



ஜகத்குரு
ஸ்ரீ காமகோடி ஆச்சார்யாள்

ஸர்வே வேதா யத்பதம் ஆமநந்தி முதலிய ச்ருதிகளால் நாம் அறிவது என்னவென்றால் எல்லா வேதங்களும் யோகிகளும் ரிஷிகளும் மற்றுமுள்ள ஞானிகளும், ஒன்றையே அடைய விரும்புகிறார்கள். அந்த ஒன்று என்னவென்றால், 'ஓம்' என்பது தான். ஓம் என்பதைப் பற்றிய விஷயங்கள் மாண்டூக்யோபநிஷத்தில் விரிவாகவும் ஸ்பஷ்டமாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன.

சாந்தம், சிவம், அத்வைதம், சதுர்த்தம் மன்யந்தே, ஸ ஆத்மா ஸ விஜ்ஞேய:

அதாவது, அந்த ப்ரஹ்மம், எல்லாம் ஒடுங்கினதும், சிவமென்று குறிக்கத்தகுந்ததும், இரண்டற்றதும், விச்வதைஜஸ ப்ராஜ்ஞனுக்கு மேலானதுமாக இருக்கின்றது.

வேதங்களுள் யஜுர்வேதம் முக்யமானது. அதற்குள் அதன் மத்திய பாகமாகிற நாலாவது காண்டம் முக்யமானது. அதற்குள்ளும் மத்திய பாகமான நாலாவது பிரச்னம் முக்யமானது. அதுதான் ஸ்ரீருத்ரம். அதற்குள்ளும் "நமச்சிவாய" என்ற பஞ்சாக்ஷர வாக்கியம் மத்தியிலிருக்கின்றது. அதன் மத்தியில் "சிவ" என்ற இரண்டு அக்ஷரம் அடங்கியிருக்கிறது. இதையே ஜீவரத்னமென்று பெரியோர்கள் சொல்வார்கள். இந்த அபிப்பிராயத்தை அப்பைய தீக்ஷிதர்வாள் ப்ரஹ்ம தர்க்க ஸ்தவத்தில் சொல்லியிருக்கிறார்கள். அந்த ப்ரஹ்மம் சிவஸ்வரூபம் என்று தெரிகிறது.

அப்படிப்பட்ட ஸ்வரூபத்தை ஆராதிப்பதற்கு அடையாளமாகச் சிவ பக்தர்களெல்லோரும் ஐந்துவித காரியங்களைச் செய்துகொண்டிருக்கவேண்டும். அவைகளாவன:

(1) விபூதி பூசிக் கொள்ளுதல்.

(2) ருத்ராக்ஷம் அணிதல்.

(3) பஞ்சாக்ஷர மந்த்ரத்தை ஜபம் செய்தல். பஞ்சாக்ஷர மந்த்ரம் உபதேசமாகாதவர்கள் 'சிவ' என்ற பதத்தை ஜபம் செய்தல்.

(4) பில்வதளத்தால் பரமேச்வரனைப் பூஜித்தல்.

(5) ஹ்ருதயத்தில் ஸதா சிவத்யானம் செய்தல்.

இவைகளில் ஒவ்வொன்றும் ஈச்வரனுக்கு விசேஷ ப்ரீதியை கொடுக்கக் கூடியது. விபூதி என்ருல் ஐச்வரியம் என்றும் அர்த்தம். இது அக்நியில் எரிக்கப்பட்டுச் சுத்தம் செய்யப் பட்டது. இதையே ஈச்வரனும் உடம்பில் பூசிக்கொண்டிருக்கிருர். ருத்ராக்ஷம் என்பது சிவனுடைய மூன்ருவது கண். அவர் ஒருவர்தான் உலகத்தில் நடுவில் கண்ணுடன் கூடியவர். லக்ஷ்மி உலகத்தில் ஐந்திடங்களில் விசேஷமாக வஸிக்கிருள். அவைகளாவன—பில்வம், பசுவின் பின் பக்கம், பதிவ்ரதையின் ஸீமந்தம், யானையின் மஸ்தகம், பத்மம் ஆகிய இவ்வைந்தாம். லக்ஷ்மிநிவாஸ ஸ்தானங்களுள் பில்வமும் ஒன்று. ஆதலால், அதைக்கொண்டு செய்யும் பூஜையினுல் சிவன் ஸந்தோஷிப்பார். ஆகையால் எல்லோரும் பாஹ்யாராதனம் செய்வதுடன், ஸதா காலமும் சிவஸ்வரூபத்தை ஹ்ருதயத்தில் த்யானம் செய்து கொண்டிருக்க வேண்டியது.

பிரதோஷ காலத்தில் எல்லோரும் சிவ ஸ்மரணம் பண்ண வேண்டும். மனத்தினுலும் வாக்கினுலும் சிவ என்ற இரண்டு அக்ஷரங்களைத் தியானித்துச் சொல்லவேண்டும். நித்தியம் ஸந்தியாகாலம் பிரதோஷகாலமாகும். திரயோதசி ஸந்தியா காலத்தில் இருக்கிறது மஹாப் பிரதோஷமாகும். நித்தியமும் ஸாயங்காலத்தில் ஐந்து நிமிஷமாவது சிவஸ்மரணை பண்ணிக் கொண்டுவர எல்லோரும் ஸங்கல்பம்செய்துகொள்ளவேண்டும்.

தன்னடக்கத்தின் சக்தி



மகாத்மா காந்தியடிகள்

பலமின்மை அச்சத்தை வளர்க்கிறது. அச்சமோ அவநம்பிக்கையை உண்டாக்குகிறது!

மனிதனைப் பிடிக்கும் நோய்களிலெல்லாம் மிக மிகக் கொடியதும் மோசமானதுமான நோய், அச்சம் என்பதுதான்!

நோயால் செத்துப் போகிறவர்களைவிட, அச்சத்தால் செத்துப் போகிறவர்களின் எண்ணிக்கைதான் அதிகம்; ஆகையால் யாரும் அஞ்சாதீர்கள்!

கடவுளிடம் நம்பிக்கை வைத்துக் கவுளுக்கு மட்டுமே அஞ்சி நடப்போமானால், எவருக்கும் நாம் அஞ்ச வேண்டியதில்லை.

நிலையான எந்தச் செயலையும் அல்லது உண்மையான எந்தச் செயலையும் சாதிப்பதற்கு, முதலாவதாக நமது நெஞ்சில் அஞ்சாமை வேரூன்றியிருக்க வேண்டும்!

அஞ்சாமை என்றால் திமிர் முரட்டுத்தனம் என்றோ, ஆக்ரமிப்பு என்றோ பொருளல்ல! பயம் என்பதையே மனத்தளத்திலிருந்து நீக்கிவிட வேண்டும் என்பதுதான் அதன் பொருளாகும்.

மனோபலத்தை நாம் வளர்த்து வந்தோமேயானால், ஆயுத பலம் அவசியமில்லை என்பதை நாம் உணர்ந்து விடலாம்.

புத்திக்குத் தான் இடமளிக்க வேண்டுமே தவிர கத்திக்கு அல்ல!

பயமுறுத்தலுக்கு இடம் தராத ஒருவன், புண் படுத்தும் சந்தர்ப்பங்களுக்கும் இடம் தர மாட்டான்!

ஆலோசித்துப் பார்த்தால் பேராசை என்பதுகூட ஒருவிதமான அச்சுறவுதான்! அதை ஒழித்து விட்டால் அஞ்சாமை முளைத்து விடும்!

மரியாதையை முகஸ்துதி என்றும், அடக்கமின்மையை அச்சமின்மை என்றும் தவறாகக் கருதிவிடக் கூடாது.

தானுகவே அமைத்துக்கொள்ளும் அடக்கமானது எப்பொழுதும் நன்மையையே விளைவிக்கும்.

உண்மையான தன்னடக்கமுள்ளவனுக்கு, நாளுக்கு நாள் பலம் அதிகரித்துக் கொண்டே போகும். அமைதியிலிருந்து அதிகமான அமைதிக்கு அவன் வளர்ந்து கொண்டே போகிருன்!

என் உடலுழைப்பாலும் மூளையுழைப்பாலும் வெளிப்படும் சக்தியையும் வேகத்தையும் நேரில் பார்த்தவர்கள், அவை அதிசயிக்கத்தக்கவை என்றெல்லாம் வர்ணித்திருக்கிருர்கள். அதற்கு மூல காரணமானதும், நீண்ட காலமாக நான் நோய்க்கு ஆளாகாமல் ஆனந்தமனுபவித்து வருவதற்குக் காரணமானதும், தன்னடக்கமே என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

தன்னடக்கம் என்பது ஒரு சில மகாத்மாக்களுக்கு மட்டுமன்று, மனித சமுதாயம் முழுவதற்குமே ஏற்பட்டதாகும்!

நமது இன்றையச் சமுதாய அமைப்பில், தன்னடக்கத்தை வளர்க்கும்படியான வசதிகள் எதுவும் அமைந்திருக்கவில்லை. நம்முடைய வளர்ப்பு முறையே அதற்கு எதிராக இருந்து வருகிறது!

தன்னடக்கச் சக்தியானது பெண்களைவிட ஆண்களிடமே குறைவாகக் காணப்படுகிறது.

தன்னடக்கத்தைப் பயில்வது ஆணைவிடப் பெண்ணுக்கு வெகு சுலபம்.

எண்ணங்களைக் கட்டுப்படுத்துவதுதான் தன்னடக்கத்தின் முதற்படியாகும்.

புலன் அடக்கமில்லாவிட்டால் ஆணும் பெண்ணும் வகையற்றுப் போவார்கள். புலனுணர்ச்சிகளைக் கட்டுப் படுத்தாமல் வாழ்வதானது, பாய்மரச் சிறகுகளில்லாத கப்பலில் பயணம் செய்வது போன்றதேயாகும். அந்தக் கப்பல் எதிர்ப்படும் முதல் பாறையில் மோதியதுமே தூள் தூளாக உடைந்து போகும். அதனுல்தான் புலனடக்கத்தைப் பற்றி நான் ஓயாமல் வற்புறுத்துகிறேன்.

மனப்பூர்வமான மனக்கட்டுப்பாடு, ஒருவனுடைய உடலாரோக்கியத்தை உருக்குலைப்பதில்லை!

மனத்தைக் கட்டுப்படுத்தாமல் வெறும் உடலை மட்டும் கட்டுப்படுத்த முயல்வது, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சாத்தியமாயிருந்த போதிலும், அதனுல் ஒரு பயனுமில்லை.

●

ஒரு பொழுதும் காமத்தினுலோ, பயத்தினுலோ, உலோபத்தினுலோ, உயிரைக் காக்க வேண்டுமென்ற எண்ணத்தாலோ தர்மத்தைக் கைவிடக்கூடாது. தர்மம் எப்பொழுதும் நிலையாகவுள்ளது. சுகமும் துக்கமும் நிலையற்றவை. ஜீவன் நித்யமாக உள்ளவன். ஆனுல் ''ஜீவன்'' என்ற தன்மை உண்டாவதற்குக் காரணமான அவித்யை அல்லது அஞ்ஞானம் நித்யமல்ல.

—பாரத ஸாவித்ரீ

அன்பும் நேசமும்



ஆசார்ய விஞேபா பாவே

நம் அனைவரின் வாழ்க்கையிலும் இழுபறி இருந்து கொண்டேயிருக்கிறது. ஒரு நண்பர், 'நாம் முதலாளித்துவத்துடன் முனைந்து போர் தொடுத்தாக வேண்டும்' என்ருர். நான், ''நீங்கள் சொல்லுவது சரி. ஆனுல் இந்த உடலே ஒரு முதலாளி என்பதை நாம் மறப்பதற்கில்லை. முதலாளித்துவ சமூகத்தில் வளர்ந்து வந்திருப்பது இது. நாம் முதலாளித்துவத்தை எதிர்க்க வேண்டுமானுல் முதலில் அவ்வெதிர்ப்பை இவ்வுடலிடம் தொடங்க வேண்டும். இது. எந்தச் சமயம் முதலாளிக் கட்சியில் போய்ச் சேர்ந்து விடுமோ சொல்ல முடியாது. நான் இதை அனுபவித்துப் பார்த்தவன். ஒரு சமயம் உடலுக்குக் காய்ச்சல் வந்துவிட்டால் போதும். இது உடனே, 'இரண்டு நாட்களுக்கு என்னை விட்டுவிடுங்கள், ஓய்வெடுத்துக்கொள்ளுகிறேன்' என்கிறது. அப்பொழுது எனக்கு இந்த உடம்பு இது பேசுவது முதலாளிப் பேச்சு என்று உடனே தெரிந்துவிடுவதால், 'முடியாது; நட, மேலே' என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுவது வழக்கம். இவ்வாறு நமக்கும் நம் உடலுக்குமே இவ்வளவு ஆழ்ந்த விரோதம் இருக்கிறதே? நம் வாழ்க்கையிலேயே இவ்வாறு முரணிருப்பதைப் பார்க்கிருேமே?'' என்றேன்.

எந்த மனிதனைப் பார்த்தாலும் நமக்கு நம் ஆன்மாவே எதிரில் நின்றுகொண்டிருப்பதாகத் தோன்றவேண்டும். அப்பொழுது நாம் ஒன்ருய்ச் சேர்ந்து அமரவும் உண்ணவும் பேசவும் செய்யலாம். நம் உள்ளத்தில் அளவு கடந்த அன்பு மட்டும் இருந்துவந்தால், நம்மிடையே வாதப் பிரதிவாதங்கள் கடல் அலைகள்போல் எவ்வளவு எழுந்தாலும்பாதகமில்லை. கடலின் அலைகள் எவ்வளவு உயரம் எழினும், அவை கரையைக் கடந்து அப்பால் போவதில்லை. நம் வீட்டில் போலவே சமூகத்திலும், மக்களிடையிலும் அன்பு நிலவவேண்டும். அடிப்படையில் அன்பு இருந்தால் மேலே எவ்வளவு சண்டைகள்,

சச்சரவுகள் நடந்தாலும், அவைகளிலும் ஓர் இனிமை இருக்கும். நீங்கள் 'தத்துவத்திற்காகச் சண்டை போடுகிறோம்' என்று சொல்லித் தப்பப் பார்க்கலாம். ஆனால் நான் உங்கள்சண்டையை எப்பொழுது ஒப்புவேன் தெரியுமா? சண்டை போடும்பொழுது போட்டுவிட்டு, பின் ஒருவரோடொருவர் கைகோர்த்துக் கொண்டு நீங்கள் போக முடியும் பொழுதுதான். ஒரு நண்பர், 'எனக்கு எவரிடமும் வெறுப்போ விரோதமோ இல்லை' என்றார். அதற்கு நான், 'தாய்க்குத் தன் பிள்ளையினிடம் வெறுப்பில்லை, விரோதமில்லை என்றால் போதுமா? நாம் மனிதர்கள் என்று வளைய வருவதற்குப் பிறரை வெறுக்காதிருந்தால் மட்டும் போதாது. நமக்கு எல்லோரிடமும் அன்பு இருக்கவேண்டும். அன்பிருந்தால் நாம் எவ்வளவு வேண்டுமானாலும் நம் முன்பேச்சு வார்த்தைகள் நடத்தலாம். நம் கருத்துக்களிடையே ஒற்றுமையில்லாவிட்டால் பாதகமில்லை. நாமெல்லோரும் ஒருவரையொருவர் ஆதரித்து அன்பு செலுத்த வேண்டும். நமக்கு ஒருவரையொருவர் பார்க்காத பொழுது உறக்கம் வரக்கூடாது. என்றேன்.

இராமாயணத்தில் லட்சுமணனைக் காணாதநாளில் இராமனுக்கு உறக்கமே வராது. என்று எழுதியிருக்கிறது. இவ்வாறு நாம் ஒருவரோடொருவர் நேசம் கொள்ள வேண்டும். இந்த அன்பும் நேசமும் இருக்கையில் எவ்வளவுதான் வாத விவாதங்கள் செய்தாலும், உண்மையைக் காண்பதற்கு அவை உதவுமேயன்றி, அவைகளினால் மனமாறுபாடு தோன்றாது. 'இந்தப் பாரத நாட்டில் மட்டுமல்ல, புவியெங்குமுள்ள அத்தனைமனிதரும் நானே. நானே தான் அவர்களெல்லோரும்' என்று நீங்கள் உங்கள் உள்ளங்களில் உணரவேண்டும். இது உறுதியாகிவிட்டால், நீங்கள் பிறகு எவ்வளவு சண்டை போட்டுக்கொண்டாலும் பாதகமில்லை. அன்பில்லாத சண்டையே ஆபத்தானது.

●

பூர்வ ஜன்ம கர்மம் என்பது, புண்ணிய ரூபமாகவும் இருக்கும். பாபரூபமாகவும் இருக்கும். ஒவ்வொருவனும் தன் வாழ்நாள் முழுவதும் புண்ணியம் மாத்திரமோ பாபம் மாத்திரமோ தனியாகச் செய்திருக்கமாட்டான். மிகுந்த புண்ணியசிலனுங்கூடத் தனக்குத் தெரியாமலே ஏதாவது பாவம் செய்திருக்கலாம். அவ்விதமே பாவியும் தனக்குத் தெரியாமல் ஏதாவது புண்ணியம் செய்திருப்பான். ஆகையால், ஒருவன் முன் ஜன்மத்தில் செய்த புண்ணியத்தையும் பாவத்தையும் அநுபவிப்பதற்காகவே மறுபடியும் ஜன்மம் எடுக்கிறான் என்பது இயற்கை நியதி.

தெய்வபக்தியே சிறந்த உபாயம்

மகாகவி சி. சுப்ரமண்ய பாரதியார்

சைதன்யம் அல்லது சுத்தமான அறிவே கடவுளின் மூல ரூபம்.

நாஸ்திகன் ப்ரக்ருதியென்பதும், சைவன் சிவனென்பதும், மஹமதியன் அல்லா என்பதும் —ஒரே பதார்த்தம்; 'ஜகத்தின் காரணப் பொருள்'.

கடவுள் எத்தன்மையுமுடையான். எல்லா அறிவும், எல்லா இயக்கமும், எல்லாப் பெருளும் எல்லாவடிவமும் எல்லாம் தானே யாகி நிற்பான்.

சக்தியால் உலகம் வாழ்கிறது; நாம் வாழ்வை விரும்புகிறோம்; ஆதலால் நாம் சக்தியை வேண்டுகிறோம்.

ஒரே வார்த்தை: சக்தியை வேண்டினால் சக்தி கிடைக்கும்!

ஒவ்வொருவனுக்கும் மூன்று வித சக்தி வேண்டும். அறிவு; செல்வம்; தைரியம், இந்த மூன்றும் நமக்கு இகலோகத்தில் கிடைக்கும் படியாகவும், இதனால் பரலோக இன்பங்களும் சாத்தியமாகும் படியாகவும், நாம் தெய்வத்தை வழிபடுகிறோம்.

ஆத்மா உணர்வு; சக்தி செய்கை.

உலக முழுவதும் செய்கை மயமாக நிற்கிறது. விரும்புதல் அறிதல், நடத்துதல் என்ற மூவகையான சக்தி இவ்வுலகத்தை ஆளுகின்றது. இதை பூர்வ சாத்திரங்கள் இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியாசக்தி என்று சொல்லும்.

பயம், ஸந்தேஹம், சலனம் மூன்றையும் வெறுக்க வேண்டும். இதனால் சக்தியேற்படும்.

துன்பமில்லாத நிலையே சக்தி; தூக்கமிலாக் கண்விழிப்பே சக்தி.

அன்பு கனிந்த கனிவே சக்தி; ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி.

கோவிலுக்குப் போனுலும் சரி; போகாவிட்டாலும் சரி; தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி; கும்பிடாவிட்டாலும்சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினுல் தெய்வம் அருள் புரியும்.

எல்லாத் தெய்வங்களும்ஒன்று. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிலும் தெய்வ ஒளி காண வேண்டும். தெய்வத்தின் ஒளி கண்டால் நான்காம் நிலேயாகிய வீடு தானே கிடைக்கும்.

ஹிருதயத்தில் சுத்தமான, பயமற்ற, கபடமற்ற, குற்றமற்ற, பகைமையற்ற எண்ணங்களே நிறுத்திக் கொண்டால், உடம்பில் தெய்வத்தன்மை (அமரத்தன்மை) விளங்கும்.

வஞ்சனேயில்லாமல், ''ஏதோ உலகத்திற் பிறந்தோம். தெய்வம் விட்டதே வழி'' என்று ஆற்றின் மீது மிதந்து செல்லும் கட்டை போல் உலக வெள்ளத்தில் மிதந்து செல்ல வேண்டும். அங்ஙனம் முற்றிலும் பாரதீனுய் எவன் ஈசுவரன் மீது சகல பாரத்தையும் போட்டு விட்டு நடக்கிருனே, அவனுக்குத் தெய்வத் தன்மை உண்டாகும். இதில் சந்தேகமே கிடையாது.

எதிர் பார்க்க முடியாத பயன் உலகத்தார் கண்டு வியக்கும் வண்ணமாக ஒருவனுக்குக் கை கூட வேண்டுமானுல், அதற்குத் தெய்வ பக்தியே உபாயம்.

தெய்வ பக்தி உண்மையானுல், பரோபகாரம் அங்கேயிருக்கும். பரோபகாரம் இல்லாத இடத்தில் தெய்வபக்தி வேஷத்தைத் தவிர வேறென்றுமில்லே.

உண்மையான தெய்வபக்தியிருந்தால் மனே தைரிய முண்டாகும். மனே தைரியம் இருந்தால் உண்மையான தெய்வபக்தி உண்டாகும். மனே தைரியத்தினுல் ஒருவன் இந்த ஜன்மத்திலேயே தேவநிலே பெறுவான்.

பொதுக் காரியங்களிலும், ராஜீய விஷயங்களிலும் பாடுபடுவோருக்குத் தெய்வபக்தி வேண்டும்.

வீட்டிலே தெய்வத்தைக் காணத் திறமை இல்லாதவன் மலேச் சிகரத்தை அடுத்ததொரு முழையிலே கடவுளேக் காண மாட்டான்.

கல்லில் மாத்திரம் தெய்வம் இருக்கிறதென்று நம்பி, நம்மைச் சூழ்ந்த ஜனங்களிடம் தெய்வம் இல்லேயென்று நம்பலாமா? கவனி! அண்ட பகிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளேயிருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே நம்மைச் சூழும் அநந்த கோடி ஜீவராசிகளாக நின்று சலிக்கிறது.

கேட்டவுடனே கொடுப்பது தெய்வத்திற்கு வழக்கமில்லே. பக்தி பக்குவமடைந்த பிறகுதான் கேட்ட வரம் உடனே கிடைக்கும். அதுவரை தாமசங்கள் உண்டாகும். இது கர்ம விதி.

சுத்தமான, மாசு படாத, கலங்காத, அஞ்சாத, பிழை படாத, சாதாரண அறிவே பரம மெய்ஞ் ஞானமாகும்.

வெளிப் பொருள்களிலே பற்று நீங்கியபோது, பரமாத்ம ஞானம் கிடைக்கிறது.

பராசக்தியெங்கும் இருக்கிருள் எப்போதும் அவள் இருக்கிருள். தொழிலே உலகம். அவளே உலகம். குழந்தைகளும் சாமான்ய ஜனங்களும் அவளைச் சிலையென்று நினைக்கிருர்கள். அவள் சிலையில்லை, உண்மையொளி. அது கோயிற்புறத்தில் மாத்திரம் இல்லை; அகத்திலுமிருக்கிறது.

வெறுமே பொருள் தெரியாமல் சிலைகளையும் கதைகளையும் கொண்டாடுவோர்க்குத் தெய்வங்கள் வரங்கொடுப்பதில்லை.

எப்படிச் சாதாரணமாக ஒரு கல்லில் நல்ல சாதுக்கள் பக்தியுடன் மந்திரம் ஜபித்துக் கும்பிட்ட மாத்திரத்தில் பகவான் நேரே நர்த்தனம் பண்ணுவாரோ, அதுபோல் யோக்யதையில்லாத பூசாரி தொட்டமாத்திரத்தில் பகவான் அந்தக் கல்லை விட்டுப்போய் விடுவார். அது மறுபடி சாதாரண ரஸ்தா உருளைஸ்தானத்திற்கு வந்து சேர்ந்துவிடும். ●



இந்தியாவின் தலைசிறந்த மர்பி ரேடியோ விற்பனையாளரும், தமிழகத்தின் முதன்மையான தவணைமுறை வியாபாரிகளுமாகிய சென்னை திரு, வி. ஜி. பன்னீர்தாஸ் சகோதரர்களின் தங்கை திருவளர் செல்வி புஷ்பாவுக்கும், திருவளர் செல்வன். வி. ஜே. எம். சார்ல்ஸ், எம்.ஏ. அவர்கட்கும். 7-5-69 புதன்கிழமையன்று சென்னையில் திருமணவிழா மிகவும் விமரிசையாக நிகழ்வுற்றது. ஏராளமான நண்பர்களும் பிரமுகர்களும் வருகை தந்து விழாவினைச் சிறப்பித்தனர். மணமக்கள் நீடுழி வாழ்க!

திருக்கோயில் வழிபாடு

கடவுள் எங்கும் நிறைந்த பொருள். உலகத்தில் காணும் ஒவ்வொன்றிலும் அவன் விளங்குகின்றான். இது பொது விதி. சிறப்பாகக் கூறுமிடத்து, எந்த இடத்தில் மனம் அன்புகனிந்து இறைவனோடு கூடுகின்றதோ, அங்கே கடவுளின் திருவருட் கருணை நிறைந்து நிற்கும்.

நமது ஆன்றோர்கள் கடவுளை அவ்விதம் காணமுடியாத மக்களுக்காகக் கோயில்களையும், கடவுள் திருவுருவங்களையும் அமைத்துத் தந்தனர். நமது உடம்பு முழுதும் உயிர் கலந்து நிற்கிறது. அவ்விதமிருந்தாலும் சிலபாகங்களை நாம் உயிர்நிலையாகக் கொள்வதேபோல, கோயில்களே இறைவன் அருள் பெருகும் இடங்களாகக் கொள்ள வேண்டும்.

கடவுளிருக்குமிடம் புனிதமானது. அங்கு எல்லாம் சுத்தமாகவும், அழகாகவும் அமைத்து வைக்க வேண்டும். அப்பொழுது தான் நம் மனது இறைவனுடன் ஒன்றுபடும்.

நாமும் அங்கு போகும் பொழுது சுத்தமாகவும், ஒழுங்காகவும் போய்வரவேண்டும். நன்ருகக் குளித்துவிட்டு அவரவருடைய சமயத்திற்குள்ள அடையாளங்களைத் தரித்துக் கொண்டு செல்லவேண்டும். சைவ சமயத்தார்க்கு விபூதி பூசுதலும், உருத்திராக்கம் தரித்தலும் அடையாளங்களாகக் கொள்ளப்படுகின்றன. இதுபோல் திருமண் காப்பு தரித்துக்கொள்ளுதலும், திருத்துழாய் மணிமாலை அணிந்து கொள்ளுதலும், வைணவ சமயத்தார்க்கு அடையாளங்களாம்.

கோயிலுக்குப் போகும் பொழுது உலக விவகாரங்களிலே மனத்தைச் செலுத்தாமல், நாம் வழிபடச் செல்லும் பெருமானின் திருநாமங்களை உச்சரித்துக்கொண்டு பயபக்தியோடு செல்லுதல் வேண்டும். நாம் பூண்பதும் காண்பதும் நினைப்பதும் ஒன்ருக இருந்தால்தான் நமக்கு நினைத்தது எல்லாம் கைகூடும்.

குழந்தைகளிடத்தும், குருவிடத்தும், பெரியோர்களிடத்தும் நாம் செல்லும்போது

வெறுங்கையுடனே போகாது நம்மாலியன்ற பூ, பழம் முதலியன கொண்டுபோவது போல; எல்லாவுலகத்தையும், உயிர் வகைகளையும் படைத்துக்காக்கும் பெருமானிடம் நம்மால் இயன்ற பொருள்களை எடுத்துச்சென்று பெருமானுக்குச் சமர்ப்பித்து வணங்குதல் முறையாகும். இன்னும், அபிஷேகத்திற்குகந்த இளநீர், பால், தயிர், பழவகைகள், பன்னீர் முதலியனவும், வழிபாட்டுக்குச் சிறந்த புட்பங்கள், தேங்காய், சூடன், ஊதுவத்தி, சாம்பிராணி முதலியனவும், தீபமிட எண்ணெய், நெய் முதலியனவும் கொண்டு சென்று செலுத்தி வழிபடவேண்ரும்.

முதலில் கோபுரதரிசனம் செய்துகொண்டு, பிறகு தலவிநாயகரைத் தரிசிக்கவேண்டும். நம்முடைய வினைகள் தீரவும் பெருமான் வழிபாடு பூர்த்தியாகவும் பிரார்த்தித்துக் கொண்டு, தலையில் குட்டிக்கொண்டும், தோப்புக் கரணங்களிட்டும், விநாயகரை வழிபட வேண்டும். இப்பெருமான் சந்நிதியில் தேங்காய்களைச்சிதற விடுதல்சிறந்தது.

பிறகு கொடிமரத்தடியிற் சென்று வணங்கிக் கொண்டு நந்தியின் பின்புறம் சென்று நந்திபெருமானுடைய கொம்புகளுக்கிடைவழியில் பெருமானைக் கண்டு தரிசிக்க வேண்டும். வலமாக நந்தியின் முன்புறம் சென்று வணங்கி உத்தரவு பெற்று உள்நுழைய வேண்டும். அங்கு திருவாயிலில் துவார பாலகரிருப்பர். அவர்களை வணங்கிக்கொண்டு உட்புறம் சென்று பெருமான் சந்நிதியை யடைதல் வேண்டும்.

அங்கு நின்று நமக்குத் தெரிந்த தோத்திரங்களைச் சொல்லி வழிபட்டு, நம்முடைய பிரார்த்தனையைச் செலுத்திக்கொள்ளவேண்டும். பிறகு வலமாகச் சுற்றுக் கோவிலிலுள்ள நாயன்மார்கள், தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர், மகாலக்ஷ்மி, நடராசர், நவக்கிரகங்கள் போன்ற மூர்த்தங்களையும் வணங்கிக்கொண்டு, மூன்று முறை சுவாமி கோவிலில் வலம் வருதல் முறையாகக் கொள்ளப்படுகிறது. மூன்ருவது சுற்றில் ஈசானத்தில் அமர்ந்திருக்கும் சண்டீசரைத் தரிசித்து, வழிபாடு பூர்த்தியடையும்படி பிரார்த்தித்துக் கொள்ளுதல் வேண்டும்.

பிறகு அம்பிகையாரது ஆலயத்திற்குச் சென்று, அங்கும் சந்நிதியில் நின்று தோத்தரித்து வழிபட்டு, குறைந்தது இரண்டு முறை வலம் வந்து வெளி வருதல் வேண்டும். மீண்டும் கொடிமரத்தடிக்கு வந்ததும் கீழே விழுந்து நமஸ்கரித்து, அங்கு நின்று சுவாமி தரிசனம் செய்து உத்தரவு பெற்றுக்கொள்ள வேண்டும். உத்தரவு பெற்றுக்கொள்ளுமுன், அங்கு அமர்ந்து செபம் முதலியன செய்ய வேண்டும். சுவாமி கோவிலிலுள்ள தென்முகப் பரமாசிரியராகிய தக்ஷிணாமூர்த்திசந்நிதியிலமர்ந்து, பஞ்சாக்ஷரமோ

மற்ற மந்திரங்களோ, அல்லது தோத்திரங்களையோ உருவிட்டால் மிகுந்த பலன் கிடைக்கும். கொடிமரத்தைத் தாண்டி உள்ளே கீழே விழுந்து நமஸ்காரம் செய்யலாகாது.

'ஆலயம்' என்பதை ஆ + லயம் எனப் பிரிக்கலாம். 'ஆ' என்பதற்கு ஆன்மா என்று பொருள். 'லயம்' என்பதற்கு லயிப்பதற்கு அல்லது சேருவதற்கு உரியது என்பது பொருள். ஆகவே, ஆலயம் என்பதற்கு "கடவுளது திருவடியில் ஆன்மா லயிப்பதற்கு உரிய இடம்" என்பது பொருள்.

'ஆ' என்பது ஆணவமலத்தையும், 'லயம்' என்பது அடங்கியிருத்தலையும் குறிக்கின்றமையால், ஆலயம் என்பதற்கு ஆணவமலம் அடங்குவதற்குரிய இடம் என்றும் பொருள் கூறலாம். இதற்குக் கோயில் என்றும் ஒரு பெயர் உண்டு, அதனைக் 'கோ + இல்' எனப் பிரித்து, கோ — கடவுள், இல் — தங்குமிடம், கடவுள் தங்குமிடம் எனப் பொருள் கூறுவர்.

எங்கும் நிறைந்து விளங்கும் கடவுளுக்குக் கோயில் எதற்கு என்பார் ஒரு சாரார். பூமியினடியில் எங்கும் வியாபித்திருக்கும் தண்ணீரை நமக்கு உபயோகப்படுத்த வேண்டுமானால், ஒரு கிணறு வெட்டிக் கட்ட வேண்டியிருக்கிறது. தண்ணீர் பூமியின் அடியில் எங்கும் நிறைந்திருந்தாலும் கிணற்றினாலேயே நமக்குத் தாகவிடாய் தீருகிறது. மின்சாரம் ஆகாயமெங்கும் வியாபித்திருந்தாலும், மின்சார நிலையம் மூலமாகவே நமக்கு அதனை அனுபவிக்க முடிகிறது. இவற்றைப்போல், கடவுள் எங்கும் நிறைந்திருந்தாலும், ஆலயங்களில் விசேஷமாக நின்று அருள் செய்கின்றார். ஆகையால், அவர் அருளைப்பெற ஆலயம் நமக்கு இன்றியமையாததாகின்றது.

●

கவலைகளை நாம் எப்போதும் தாக்கி வெல்ல முயல வேண்டுமே தவிர, அவற்றிலிருந்து தப்பியோட எண்ணக் கூடாது. ஏனெனில், அவை நமது நிழலைப் போன்றவை; நாம் ஓடஓட நம்மைத் துரத்திக்கொண்டே வரும். கவலையை மறப்பதற்கு என நாம் செய்யும் காரியங்களெல்லாம் அவ்வாறு தப்பியோடும் முயற்சிகளேயாகும். அவை அத்தனையும் நம்மைப் பலவீனப்படுத்தி மேலும் மேலும் கவலைக்குள்ளாக்குமேயன்றி, கவலையிலிருந்து நமக்கு விடுதலையளிக்க மாட்டா!

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை, 4 தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17. அச்சிடுபவர்: கொண்டா காசி. சீதாராமன், ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், 81-5 பாண்டி பஸார், தியாகராயநகர், சென்னை-17.

அருள்

சிரியர் : கலைச்செல்வி மணிமேகலை

அருட்பெருஞ்சோதி



தனிப்பெருங்கருணை

இறைவி வணக்கம்

ஸ்ரீ மூக மகாகவி

புடைத்து எழுந்த தன்னுடைய நகில் மண்டலங்களும் கைவளைகளும் பதிதலால், சங்கரனுடைய திருமேனியிலே நிலையான சுவடுகளைத் தோற்றுவிக்கும் வண்ணம் அவனை இறுகத் தழுவியவளும், என்றும்மாறாத இளமையோடு கூடியவளுமான ஓர் அற்புத அணங்கை, நான் காஞ்சிமா நகரில் காணப்பெற்றேன்.

மதுரமான (கரும்பு) வில்லை உடையவளும், மலையின் மகளாகத் தோன்றியவளும், நறுமணங்கமழும் மலர்களையே பாணங்களாகக் கொண்டவளும், சைதன்யமே தன் வடிவமாக விளங்குபவளும், காஞ்சிமா நகரின்கண்ணே திருவிளையாட்டயர்பவளும், செவ்வரத்தம் பூவின் காந்தியைக் கவர்பவளுமான ஸ்ரீ பரதேவதையால், நான் பரமானந்தம் அடைகிறேன்.

இனிமையான புன்னகை திகழ்பவளும், பருத்த நகில் மண்டலங்களின் பாரத்தால் தளர்வான நடையை உடையவளும், மன்மதனுடைய சாம்ராஜ்ய கர்வத்துக்குக் காரணமானவளும், காஞ்சிமா நகரின் மத்தியிலே விளங்குபவளுமான அன்னை காமாக்ஷீ தேவியால், என் உள்ளம் களிப்பு அடைகின்றது.

திருச்சிற்றம்பலம்

வேல்கொளும் கமலக் கையனை, எனையாள்
    மெய்யனை, ஐயனை, உலக
மால்கொளும் மனத்தர் அறிவரு மருந்தை,
    மாணிக்க மணியினை, மயில்மேல்
கால்கொளும் குகனை, எந்தையை, எனது
    கருத்தனை, அயன் அரி அறியாச்
சால்கொளும் கடவுள் தனியருள் மகனைத்
    தணிகையில் கண்(டு)இறைஞ் சுவனே !

என்னுடை உயிரை, யான்பெறும் பேற்றை,
    என்னுடைப் பொருளினை, எளியேன்
மன்னுடைக் குருவின் வடிவினை, என்கண்
    மணியினை, அணியினை, வரத்தே
மின்னுடைப் பவள வெற்பினில் உதித்து
    மிளிர் அருள் தருவினை, அடியேன்
தன்னுடைத் தேவை, தந்தையை, தாயை,
    தணிகையில் கண்(டு)இறைஞ் சுவனே !

—திருவருட்பா

இல்லற வாழ்க்கையும் சாதுக்களின் நட்பும்



பகவான் ஸ்ரீ

இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

குடும்பஸ்தன் ஒருவனுக்கு போகம் யோகம் ஆகிய இரண்டும் இருக்கவேண்டும். அதாவது, அவன் பொருளையும் அருளையும் தேடவேண்டும். பொருளில்லாது அவன் அருளைத் தேடுவானுகில், அவனுடைய முகமே உலர்ந்தது போலத் தென்படும். மிகைபட்ட பொருளை அவன் நாடுவானுகில், அவன் அதில் மூழ்கிப் போய்விடுவான்.

குடும்ப வாழ்க்கை வாழ்கிறவர்களுக்கும், கட்டுப்பாடு மிக அவசியமானது. முயன்ருல், நெறியானவாழ்க்கைவாழ்வதில், அவர்களும் வெற்றி பெறுவார்கள்.

பற்றற்றவனுயிருந்து ஒருவன் குடும்பவாழ்வு நடத்துவது, மிகக் கஷ்டம். ஜனகர் போன்று நான் பற்றற்றிருக்கிறேன் என்று சிலர் சொல்லுகின்றனர். அது வெறும் வாய்ப்பேச்சு. குடும்ப வாழ்வில் நுழைதற்கு முன்பு ஜனகர் புரிந்த கடுந் தபசை, இவர்களுள் யார் புரிந்திருக்கின்றனர்?

குணங்களைத் தாண்டி அதீத நிலைக்குப் போயிருக்கும் பரமஹம்ஸர்கள், உடைமை எதையும் வைத்திருப்பதில்லை. குடும்பிகள் அந்நிலையில் இருக்க முடியாது. குடும்பசம்ரக்ஷணையின் பொருட்டு அவர்கள் பொருள் தேடவும் வேண்டும்; தேடியதைப் பாதுகாத்து வைக்கவும் வேண்டும்.

இல்வாழ்பவன் ஒருவன் தன் குடும்பத்திலிருந்துகொண்டே ஆத்மசாதனங்கள் புரியலாம். அது கோட்டைக்குள் இருந்துகொண்டு போர் புரிவதற்குநிகர். சந்நியாசி ஒருவன் வெட்டவெளியிலிருந்துகொண்டு போர் புரிபவனுக்கு ஒப்பாகிருன். அவனுக்கு ஆபத்துக்கள் அதிகம். கோட்டைக்குள்இருப்பவனுக்கு ஆபத்து குறைவு.

அன்னதானம் செய்யப்படுகிற இடங்களிலிருந்து, துறவியர்களும் வறியோரும் உணவை ஏற்றுக் கொள்ளலாம். ஆனுல் இல்லறத்தினர் அத்தகைய இடங்களிலிருந்து உணவைஏற்றுக்கொள்ளலாகாது.

''குடும்பிகளாகிய எங்களுக்கு ஈசுவர வழிபாடு செய்ய சாத்தியப்படாது.''

ஏன் அப்படிச் சொல்லுகின்ருய்? குடும்பக் காரியங்களையும் கவனித்துக்கொள்ளலாம்; ஈசுவர வழிபாட்டையும் முறையாகச் செய்யலாம். அவல் இடிக்கிற மங்கையின் செயலை நீ பார்த்ததில்லையா? ஒரு கையில் குழந்தையைப் பிடித்துக்கொண்டு, அதற்குப் பாலூட்டிக் கொண்டிருக்கிருள். மற்ருெரு கையால் இடிபடுகிற அவலைத் தள்ளிக் கொடுத்துக்கொண்டிருக்கிருள். அவல் வாங்க வந்த வாடிக்கைக்காரர்களோடு, தனக்குச் சேரவேண்டிய பாக்கிப் பணம் எவ்வளவு இருக்கிறது என்பதைப் பற்றிப் பேசுகிருள். இத்தனை அலுவல்களுக்கிடையில், அவலைத் தள்ளிக் கொடுக்கிற தன் கையின்மீது உலக்கை படாது பார்த்துக் கொள்கிருள். அவளுடையமனத்தில் முக்காலே மூன்று வீசம் பகுதி, கையைக்காப்பாற்றுவதில் செலுத்தப்படுகிறது; வீசம் பகுதி மனத்தை வைத்துக் கொண்டு பாக்கிக் காரியங்கள் அனைத்தையும் கவனிக்கிருள். அதே வித்தில், நீ வீசம் பகுதி மனத்தை வைத்துக்கொண்டு, உலகக் கடமைகள் அனைத்தையும் சரியாகச் செய்துசாதித்துவிடலாம். முக்காலே மூன்றுவீசம்பகுதி மனத்தை, ஈசனிடம் செலுத்து. இல்லையேல் நீ ஒழிந்து பட்டுப் போவாய்.

குடும்பஸ்தன் ஒருவன் சாதுக்களுக்கு ஏதோ பொருளுதவிசெய்வதை முன்னிட்டு, அவர்கள் இவன் சொற்படி கேட்கவேண்டுமென்று எதிர்பார்க்கலாகாது. அப்படிப் பொருள்கொடுக்கிறவர்கள் சொற்படி கேட்கிற சாதுக்கள், சரியான சாதுக்கள் அல்ல.

பணத்தைச் செலவுபண்ணத் தெரிந்துகொள்ளுதல், ஓர் அலாதியானகலை. குடும்பஸ்தன்ஒருவன், பயன்படாத காரியங்களில் பணத்தை வீண் செலவு செய்யலாகாது. சான்ருேர்க்குச் சேவை செய்வதுபோன்றகிருத்தியத்தில், கட்டாயம் பணத்தைச் செலவு செய்ய வேண்டும்.

மக்களுக்கு அன்னதானம் பண்ணுவது, ஈசுவர ஆராதனைக்கு நிகர். அவர்கள் உள்ளத்தில்அந்தராத்மாவாயிருப்பவர்க்கு ஆகுதி படைப்பதற்கு நிகர் அது. ஆனுல் துஷ்டர்களுக்கும் பாபிகளுக்கும் அன்னதானம் செய்யலாகாது.

ஒருவன் தனது முன்னோர்களுக்கு நிகழ்த்திய சிராத்தச் சடங்கில், ஏராளமாக அன்னதானம் செய்து கொண்டிருந்தான். பசு ஒன்றைக் கொல்லுதற்கு, கசாப்புக்கடைக்காரன்ஒருவன் அவ்வழியே அதைப் பிடித்துக்கொண்டு போனுன். பசு கட்டிற்கடங்காததனுல், அவன் பசியால் களைத்துப் போயிருந்தான். ''உண்டுநிகழ்கிற விருந்தைஉண்டு பசியை ஆற்றிவந்து, இப்பசுவை இழுத்துச் செல்வேன்'' என்று, அவன் அதைக் கட்டிவைத்து விட்டு, சிராத்தச்சடங்கு உணவைத் திருப்தியாக ஏற்றுச் சென்ருன். பின்பு, அவன் பசுவைக் கொன்ற பாபத்தில் ஒரு பகுதி, சிராத்தம் செய்தவனைவந்துசார்ந்தது. சிராத்தச் சடங்கு கர்மகாண்டத்துக்குரியது. அக் கர்மங்களை முறையாகச் செய்யாதவர்களுக்குக் கேடு நிகழக்கூடும். ஆனுல், பக்திமார்க்கத்தில்செல்லுகிறவர்களுக்கு அத்தகைய ஆபத்து ஒன்மில்லை,

குடும்பஸ்தர்கள் தானம் செய்கின்றனர். அது மிக நன்று. ஆனுல் சுயநல எண்ணத்தோடு தானம் செய்வது சரியல்ல. சுய

நல எண்ணத்தை விட்டுவிடுவதோ மிகக் கடினமானது.

பிருந்தாவனம் சென்றிருந்த ஒருவர், ஆங்காங்கு வனத்தில் தனித்தனியாக இருந்து தியானம் பண்ணிக்கொண்டிருந்த சாதுக்களைப் பார்த்ததாகத் தெரிவித்தார். 'அவர்களுக்கு ஏதாவது காணிக்கை செலுத்தினுயா?' என்று பரமஹம்ஸர் கேட்டார். இல்லையென்ற பதில் வந்தது. அம்மனிதர் நடந்துகொண்டது சரியல்லவென்று பரமஹம்ஸர் மறுத்துச் சொன்னுர். சாது மகாத்மாக்களையும், பொருள் ஒன்றும் படையாதிருக்கிற பக்தர்களையும் பார்க்கும்பொழுது, அவர்களுக்கு ஏதாவது எடுத்து வழங்குவது, குடும்பி ஒருவனுக்கு நல்ல ஆத்மசாதனம் ஆகும்என்று பரமஹம்ஸர் பகர்ந்தார்.

பிருந்தாவனத்துக்கு யாத்திரை சென்றிருந்த ஒருவர், தமது அனுபவத்தை பரமஹம்ஸருக்குத் தெரிவித்தார். ''புரோகிதர்கள் தக்ஷிணை தரவேண்டும் என்றும், யாசகர்கள் தானம் தரவேண்டும் என்றும், ஓயாது உபத்திரவப்படுத்தினுர்கள். நாளைக்கு நான் கல்கத்தாவுக்குத் திரும்பும்பொழுது தானம் செய்கிறேன் என்று அவர்களுக்குச் சொல்லியனுப்பினேன். ஆனுல் அந்த உபத்திரவத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும் பொருட்டு, அன்றிரவே யாருக்கும் தெரியாமல் கிளம்பிவிட்டேன்'' என்றுர் அவர். அதைக் கேட்ட பரமஹம்ஸர் ''உனக்கு என்ன வெட்கமில்லையா? சொல்லுவது ஒன்று, செய்வது மற்றொன்று. இப்படிப்பொருத்தமற்று நடந்து கொள்வது நியாயமா?'' என்று திரஸ்கரித்தார்.

கஞ்சாக் குடிக்கிறவர்கள் ஒருவரையொருவர் சந்திக்கிறபொழுது, பெருமகிழ்ச்சியடைகிறுர்கள். அதே விதத்தில், பக்தர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும்பொழுது மகிழ்வுறுகின்றனர்.

மிராசுதார் ஒருவன், தனக்குச் சொந்தமாயுள்ள பல வீடுகளில் சென்று வசிப்பதுண்டு. ஆனுல், அவன் ஏதேனும் ஒரு வீட்டில் தான் பெரிதும் வசிக்கிறுன். அதே விதத்தில், கடவுள் எங்கும் நிறைபொருள். ஆனுல், பக்தனுடைய ஹிருதயம் அவருடைய கொலு மண்டபம் போன்றது.

சிஷ்யர்: மனத்தைக் கடவுள் மீது நாட்டுவது எங்ஙனம்?

பரமஹம்ஸர்: இறைவனுடைய திருநாமத்தை ஜபி. அவர் பெருமையைப் புகழ்ந்து பாடு. நல்லாருடன் இணக்கம்வைத்துக்கொள். இடையிடையே பக்தர்களையும் சான்றேர்களையும் சென்று தரிசனம் பண்ணு.

எல்லார் உள்ளத்திலும் இறைவன் இருக்கிறுர். ஆனுல் பக்தன் ஒருவன் நல்லோரோடு மட்டுமே இணக்கம் கொள்ள வேண்டும்.

மயில் ஒன்றுக்கு ஒருவன் மாலை நான்கு மணிக்குக் கொஞ்சம் அபினி கலந்த தீனிகொடுத்தால், அடுத்த நாள் மாலை சரியாக நான்கு மணிக்கு அம்மயில் திரும்பவும் தீனி தின்ன வந்துவிடும். அபினியின் வேகம் அத்தகையது. அதே விதத்தில், நல்லியல்பு படைத்துள்ள ஆத்ம சாதகன் ஒருவன், சான்றேர் ஒருவரிடமிருந்து அருள் விருந்தை ஒரு தடவை அனுபவித்துவிட்டால்,

திரும்பத் திரும்ப அவரிடம் போக எத்தனிக்கிறுன்.

இவ்வுலக இன்னல்களினின்று தப்பித்துக்கொள்ள வழி யாது, ஐயனே?

பிரார்த்தனையும் சத்சங்கமும் இன்னல்களினின்று விடுபடுவதற்கு உபாயங்களாகின்றன. நோய்வாய்ப்பட்டிருக்கும் ஒருவன், வைத்தியனுடைய உதவியின்றி நோயைக் களைய முடியாது. ஏதோ ஒரு நாள் சத்சங்கம் செய்தால் போதாது. திரும்பத் திரும்ப நல்லார் இணக்கத்தை நாடவேண்டும். ஏனென்றால், உலகப் பற்று என்னும் நோய் உடலில் ஊறிப்போய்விட்டது. நாடியை நீயே சரியாகத் தெரிந்துகொள்ள முடியாது. வைத்தியனுடைய துணைகொண்டே கபநாடி எது, பித்த நாடி எது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

இடையருத சத்சங்கம் செய்ய வேண்டும். சான்றோர், தங்களுடன் பழகுபவர்களை தெய்வத்துக்கு அறிமுகப்படுத்தி வைக்கின்றனர்.

உடலில் நாடி பார்க்கும் திறமை, ஒருவனுக்கு ஒரேநாளில் வந்துவிடுவதில்லை. நாடிசாத்திரம் தெரிந்தவர்களிடமிருந்து, அவன் அந்தப் பாடத்தைப் பொறுமையாகப் பல காலம் கற்றுகவேண்டும். 'நீர் கடவுளைத் தரிசித்திருக்கின்றீர் என்ருல், அவரை எனக்கும் காட்ட முடியுமா?' என்று ஒருவன் அலட்சியமாகக் கேள்வி கேட்கின்ருன். அத்தகையவன் சத் சங்கம் செய்யவேண்டும்; சாதனங்கள் புரியவேண்டும். ஈசுவர சாக்ஷாத்காரம் செய்தவர்களுடன் தொடர்ந்து இணக்கம் வைக்கவேண்டும்.

பராசக்தி பர்வத ராஜனுடைய புதல்வியாக அவதரித்தபொழுது, தந்தை ஹிமவானுக்குத் தனது வெவ்வேறு சொரூபங்களைக் காட்டியருளினுள். தந்தை பிரம்மத்தையும் அறிந்துகொள்ளவிரும்பி, தன் புதல்வியிடம் தெரிவித்தார். 'அப்பா, அதன் பொருட்டு நீங்கள் சத்சங்கம் செய்யவேண்டும். பிரம்மத்தைக் காட்டித் தரும் திறன் எனக்கு இல்லை' என்ருள் பார்வதி.

ஈசுவர பக்தியும், சத்புருஷர்களுடைய சகவாசமும் ஒருவனுக்கு வந்துவிட்டால் போதுமானது. மேற்கொண்டு அடைதற்கு என்ன இருக்கிறது?

குளிப்பாட்டிய யானை திரும்பவும் மண்ணை வாரித் தன்மீது தூவிக்கொள்ளும். ஆனுல், குளிப்பாட்டியதும் அதைக் கல் பாவிய இடத்தில் கட்டி வைத்துவிட்டால், அது சுத்தமாயிருக்கும். அங்ஙனம், உலகப் பற்றுடைய ஒருவன் சில வேளைகளில் தெய்விக எண்ணம் படைத்தவனுகிருன். அத்தகையவனை சத் சங்கத்திலேயே வைத்துவிட்டால், அவன் உள்ளம் மாசு படியாது இருக்கும்.

வைத்தியன் ஒருவனிடம் பயிற்சி பெறுகிறவனுக்கே, நாடி பார்க்கும் திறமை வருகிறது. அதே விதத்தில், சத்சங்கம் பண்ணுகிறவர்களுக்கு, பாரமார்த்திக விஷயங்கள் விளங்குகின்றன. லௌகிக புத்தியைக்கொண்டு தெய்விக விஷயங்களைத் தெரிந்துகொள்ள முடியாது.

அண்ணனுக்குத் தம்பி சொன்ன அறிவுரை



பாரதஸிம்ஹம் பிரம்மஸ்ரீ
சேங்காலிபுரம்

அனந்தராம தீக்ஷிதர்

ஓ அரசரே, தினமும் பொருளின் வரவு, நோயில்லாமல் இருத்தல், அன்பு கொண்ட மனைவி, பிரியமாகப் பேசுதல், தனக்கு அடங்கிய பிள்ளை, பொருளை அளிக்கும் கல்வி, இந்த ஆறும் இவ்வுலகிலுள்ள மனிதனுக்கு சுகத்தை அளிக்கும்.

பசுக்கள், ஸேவை, பயிர் செய்த பூமி, மனைவி, கல்வி, வேலைக்காரன் செய்யும் வேலை, இவைகளை ஒரு மணிநேரம் கவனிக்காவிடில் வீணாகிவிடும்.

கல்விகற்று முடிந்தவர்கள் ஆசார்யனையும், மனைவியை மணந்து கொண்டவர்கள் தாயையும், காமம் நீங்கினவன் பெண்டிரையும், உதவியை அடைந்தவர்கள் உதவி செய்தவனையும், நதியைத் தாண்டிக் கரை சென்றவன் தோணியையும், வியாதி நீங்கினவன் வைத்யனையும் அவமதிப்பார்கள். (இந்த ஆறு பேர்களும் முன்பு உபகரித்தவர்களை மறந்து விடுவார்கள் எனக் கருத்து).

வியாதியின்மை, கடனில்லாமை, வெளியூர்களுக்கு அடிக்கடி அலையாமலிருத்தல், ஸாதுக்களின் சேர்க்கை, தன் புத்தி பலத்தினால் ஜீவித்தல், பயமில்லாமல் குடி இருத்தல். ஓ அரசனே, இந்த ஆறும் மனித உலகத்திற்கு சுகத்தைத் தருகின்றன.

மனிதன் நாசத்தை அடைவதற்கு முன்பு எட்டுக் குறிகள் ஏற்

படும். முதலில் பிராமணர்களை துவேஷிப்பான். பிராமணர்களுடன் விரோதிப்பான். பிராமணர்களுடைய பொருள்களை அபகரிப்பான். பிராமணர்களைக் கொல்ல விரும்புவான். பிராமணர்களைப் பிறர் தூஷிப்பதைக் கண்டு சந்தோஷப் படுவான். இவர்களைப் புகழ்வதைக் கண்டு துக்கிப்பான். நல்ல காரியங்களில் இவர்களை அழைக்க மாட்டான். இவர்கள் யாசிப்பதைக் கண்டு அஸூயைப் படுவான். புத்தியுள்ள மனிதன் இவைகள் எட்டும் நாசத்தை அளிக்கும் தோஷங்களென உணர்ந்து, அவைகளை விட்டுவிட வேண்டும்.

ஓ பரத சிரேஷ்டரே, ஸ்நேஹிதர்களின் சேர்க்கை, நிரம்பப் பொருள் வருதல், தன் குழந்தையின் ஆலிங்கனம், அன்பு கொண்ட ஸ்திரீபுருஷர்களின் சேர்க்கை, நல்ல சமயத்தில் பிரியமாகப் பேசுதல், தனது வகுப்பினருக்குள் தலைமையாக இருத்தல், கோரிய பொருளை அடைதல், பெரிய கூட்டத்தில் பூஜிக்கப் பெறுதல் இந்த எட்டும், சந்தோஷத்தை அளிப்பதற்கு வெண்ணெய் போன்றவைகள். அவைகளே தனக்கு சுகத்தை அளிக்கின்றவைகளாகவும் இருக்கின்றன.

அறிவு, நற்குலத்தில் பிறப்பு, அடக்கம், படிப்பு, பராக்ரமம், அதிகமாகப் பேசாதிருத்தல், தன் சக்திக்குத் தக்கதானம் செய்தல், நன்றி மறவாமை இந்த எட்டு குணங்களும், மனிதனைப்பிரகாசப் படுத்துகின்றன.

ஆபத்தை அடைந்தாலும் ஒரு பொழுதும் மனத்தைத் துன்புறுத்திக் கொள்ளான், தவறிவிடாமல் முயற்சி செய்வான், துக்கம் நேரிட்டகாலத்தில் அதை ஸஹிப்பான், இப்படிப்பட்டவன்தான் மஹாத்மா. அவன் சத்துருக்களையெல்லாம் ஜெயித்துவிடுவான்.

காரியமில்லாமல் வீட்டை விட்டு வெளிதேசம் செல்வதையும், பாபிகளின் சேர்க்கையையும், பிறர் மனைவியைத் தொடுவதையும், டம்பத்தையும், திருட்டையும், கோள் சொல்வதையும், கள் குடித்தலையும் எவன் விட்டுவிடுகிறானோ, அவன் எப்பொழுதும் சுகியாக இருப்பான்.

போன சண்டையை மறுபடி பேசி வளர்ப்பதில்லை; பொருள் முதலிய லாபங்கள் கிடைத்தும் கர்வம் அடைவதில்லை; தானம் செய்யவேண்டுமே எனக் கவலை கொண்டு தரித்ரனாக நடிப்பதில்லை; கஷ்டத்தை அடைந்துவிட்டதால் தப்புக் காரியம் செய்வதில்லை; அப்படிப்பட்டவனை மஹான்கள், பெரியோர்களின் ஆசாரத்தைக் கடைப்பிடித்த உத்தமனெனக் கூறுகிறார்கள்.

தனக்கு சுகமேற்பட்டபோது சந்தோஷமடையாதவனும், பிறருடைய துக்கத்தைக் கண்டு சந்தோஷமடையாதவனும், தானம் கொடுத்துவிட்டுப் பின் வருத்தப் படாதவனுமான மனிதன், ஸத்புருஷனாகவும், புகழத்தக்கஒழுக்கமுடையவனாகவும் சொல்லப்படுகிறான்.

டம்பத்தையும், மோஹத்தையும் (அக்ஞானத்தையும்), பொறாமையையும், பாவச் செயலையும், அரசாங்கத்துடன் த்வேஷத்தையும், கோள் சொல்வதையும், ஜன சமூகத்தை விரோதிப்பதையும், கள் முதலியவற்றால் மதங்கொண்டவர்கள் — பித்தர்கள் — கெட்டவர்கள் இவர்க

ளோடு பேசுவதையும் மேற்கொள்ளாத பேரறிவாளனே சிறந்தவன்.

எல்லோருடைய கஷ்டங்களையும் போக்கி யாவரும் ஒற்றுமையாக இருக்கும்படி செய்கிறவனும், மிருதுவான ஸ்வபாவமுள்ளவனும் (யாவரும் தன்னை அண்டும்படியான குணமுள்ளவனும்), பெரியோர்களை நன்கு பூஜிக்கிறவனும், சுத்தமான எண்ணமுள்ளவனாய் இருப்பவனும், நல்லஜாதி ரத்தினம் போல் மனிதர்களுக்குள் தலைவனாக விளங்குவான்.

ஓ அண்ணா, இந்தப் பாண்டவர்களுக்குச் சேர வேண்டிய இராஜ்யத்தைக் கொடுத்து, புத்ரர்களுடன் சுகமாகவும், சந்தோஷமாகவும் இருப்பீர். அவ்வாறு செய்தால், நீர் தேவர்களுக்கோ, மனிதர்களுக்கோ நிந்திக்கத்தக்கவராய் ஆகமாட்டீர்.

எவன் கோட்டை முதலான தன் இருப்பிடத்திலும், பொருள் முதலியவைகளின் வளர்ச்சியிலும், அவைகளின் குறைவிலும், பொக்கிஷத்திலும், பட்டணத்திலும், சேனையிலும் அளவை அறியாதவனோ, அவன் இராஜ்யத்தில் நிலைத்திருக்க முடியாது.

இராஜ்யம் கிடைத்துவிட்டதென கர்வம் கொண்டிருக்சக் கூடாது. கிழத்தனம் சிறந்த அழகை அழிப்பதுபோல், அஹங்காரமானது இராஜ்யத்தை அழித்துவிடும்.

எதைச் சாப்பிட முடியுமோ அதைச் சாப்பிட வேண்டும். ஆனால் சாப்பிட்ட பிறகு அது ஜெரிக்க வேண்டும். ஜெரித்த பிறகு அது நன்மையைச் செய்ய வேண்டும். க்ஷேமத்தைக் கோருகிறவன் அப்படிப்பட்ட ஆகாரத்தைத்தான் உட்கொள்ள வேண்டும்,

எவ்வாறு தேன் வண்டானது புஷ்பங்களுக்குத் தீங்கு வராமல் தேனை எடுத்து வருகிறதோ, அது போல் அரசன் பிரஜைகளை ஹிம்ஸிக்காமல் வரியை வசூல் செய்ய வேண்டும்.

பூந்தோட்டத்தில் மாலை கட்டுகிறவன் மரங்களிலுள்ள புஷ்பங்களை எடுப்பானே அல்லாமல், கரி சுடுகிறவன் மரத்தை அடியோடு வெட்டுவதுபோல் வெட்டுவதில்லை. (அதுபோல் மனிதர்களை அடியோடு கஷ்டப்படுத்தி வரி வாங்காமல், சிறிது சிறிதாக வரி வாங்கவேண்டும்.)

மனிதன் இதைச் செய்தால் என்ன உண்டாகும், இதைச் செய்யாவிடில் என்ன ஏற்படும் என்பதை நன்கு ஆலோசித்து, காரியங்களைச் செய்யவேண்டும்; அல்லது செய்யாமலிருக்க வேண்டும்.

எவனுடைய சந்தோஷம், கோபம், இரண்டும் பயனில்லாமலிருக்கின்றனவோ, அவனைப் பிரஜைகள் நபும்ஸகனைப் பெண்கள் விரும்பாததுபோல் விரும்பமாட்டார்கள்.

புத்திமானான மனிதன், சிறு முயற்சியால் பெரிய பயன்களை அளிக்கும் காரியங்களை சீக்கிரம் ஆரம்பிப்பான். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய தாமதிப்பதில்லை.

மனத்தில் தோஷமில்லாமல் ருஜுவாக யாவற்றையும் கண்

ணுல் பார்க்கும் அரசன் சும்மா இருந்தபோதிலும், பிரஜைகள் அவனை விரும்புவார்கள்.

மிருகங்களைக் கொல்லும் வேடர்களைக் கண்டு மிருகங்கள் பயப்படுவதுபோல், எவனைக் கண்டு பிரஜைகள் பயப்படுகின்றனரோ; அப்படிப்பட்டவன் ஸமுத்திரங்களுக்குள்பட்ட பூமி முழுவதையும்ஆண்டபோதிலும், பதவியை விட்டு நழுவிவிடுவான்.

இதற்கு முன்புள்ள ஸாதுக்களான அரசர்கள் செய்து வந்த தர்மத்தை விடாமல் செய்யும் அரசனது பூமியானது, ஸுவர்ணம் நிரம்பி மேன் மேலும் சம்பத்துக்களை விருத்தி செய்வதாக ஆகிறது.

தர்ம வழியாகத்தான் இராஜ்யத்தைப் பெறவேண்டும். தர்மம் வழுவாமல் இராஜ்யத்தைப் பரிபாலிக்க வேண்டும். நியாயமான வழியில் வரி வாங்கவேண்டும். அப்படிப்பட்ட அரசனிடமிருந்து இராஜ்யம் வழுவாது. குறைவையும் அடைய மாட்டான்.

பைத்தியக்காரன் புலம்புகின்ற சொற்களிலிருந்தும்,மாறி மாறிப் பேசுகின்ற குழந்தைகளின் சொற்களிலிருந்தும், மற்றும் எல்லா இடங்களிலிருந்தும், ஸாரத்தை, கற்களிலிருந்து தங்கத்தை எடுப்பதுபோல் எடுக்கவேண்டும்.

வஸ்துக்களை பசுக்கள் வாசனையால் அறிகின்றன (பார்க்கின்றன). பிராமணர்கள் வேதங்களால் இவ்வுலகம் அவ்வுலகம் யாவற்றையும் பார்க்கின்றனர் அரசர்கள் கண்ணுக்குத்தெரியாத பொருள்களைஒற்றர்களால் பார்க்கின்றனர். மற்ற மனிதர்கள் கண்களால் பொருள்களை பார்க்கின்றனர்.

பசுக்கள் மழையை நாதனுக உடையவை. அரசர்கள் மந்திரிகளை பந்துக்களாகக் கொண்டவர்கள். ஸ்திரீகளுக்கு கணவர்கள் தான் பந்துக்கள். பிராமணர்கள் வேதங்களையே பந்துக்களாக உடையவர்கள்.

தர்மம் ஸத்யத்தால் காக்கப் படுகிறது. கல்வி அப்யாஸத்தால் (திரும்பத் திரும்பப் படிப்பதால்) ரக்ஷிக்கப்படுகிறது. அழகு சுத்தம் செய்வதால் (அழுக்கைப் போக்குவதால்) ரக்ஷிக்கப்படுகிறது. குலம் நன்னடத்தையால் காக்கப்படுகிறது.

அளவிஞல் நெல்முதலிய தானியங்களைப் பாதுகாக்க வேண்டும். குதிரைகளைத்தேய்ப்பது, நடத்திச் செல்வது முதலியவற்ருல் காக்க வேண்டும். பசுக்களை அடிக்கடி பார்ப்பதால் ரக்ஷிக்க வேண்டும். ஸ்திரீகளை மட்டமான வஸ்திரங்களைக்கொடுக்காமல் நல்ல வஸ்திரங்களைக் கொடுத்துப் பாதுகாக்க வேண்டும்.

நல்ல நடத்தை இல்லாதவனது குலம் நல்லதாக இருந்தபோதிலும், அது அவனுக்குச் சிறப்பைத் தராதென என் கருத்து. கீழ்ப்பட்ட வகுப்பில் பிறந்தவனுய்இருந்தபோதிலும், ஒருவனது நல்ல நடத்தையே அவனுக்குச் சிறப்பை அளிக்கும்.

கட்சிப் பிரதி கட்சிகள்



ஜகத்குரு
ஸ்ரீ காமகோடிபீடாதிபதிகள்

இன்றைக்குத் தொள்ளாயிரம் வருஷங்களுக்கு முன்பு, உத்தர தேசத்தில் கிருஷ்ணமிச்ரரென்று ஒரு பெரியவர் இருந்தார். கிருஷ்ணுஷ்டபதீ செய்த ஜய தேவரும் அவரும் ஸம காலத்தவர்களென்று சொல்லுகிருர்கள். அந்த கிருஷ்ணமிச்ரர் பிரபோதசந்திரோதயம் என்று ஒரு கிரந்தம் எழுதியிருக்கிருர். பிரபோதம் ஞானம். ஞானமாகிய சந்திரனுடைய உதயம் என்பது அதன் அர்த்தம்.

விவேகன் என்பவன் ஓர் அரசன். அவனுடைய எதிரி மஹாமோஹன் என்பவன். விவேகனுக்கு நல்ல குணங்களெல்லாம் மந்திரிகளாகவும் ஸைந்யங்களாகவும் இருக்கின்றன. கெட்ட குணங்களெல்லாம் மஹாமோஹனுடைய பரிவாரங்கள். விவேகனுக்கு சாந்திஎன்ற மனைவி மூலமாக, பிரபோதன் என்றுஒரு புத்திரன் உண்டாகிருன். இந்த மாதிரி விஷயங்களை வைத்து, ஒரு நாடகமாக அதை எழுதியிருக்கிருர். யுத்தம், தூது, மோசம் முதலியவை அந்த நாடகத்தில் வருகின்றன. பிரபோதனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணுவதோடு பூர்த்தியாகிறது.

அந்த கிரந்தத்தை வடகலை வைஷ்ணவ ஆசாரியராகிய வேதாந்த தேசிகர் என்பவர் கண்டனம் பண்ணி, ஸங்கல்ப சூரியோதயம் என்று ஒரு நாடகம் எழுதியிருக்கிருர். பிரபோத சந்திரோதயத்திலுள்ள கொள்கைகள் தப்பு என்பது அவருடைய அபிப்பிராயம். சூரியோதயத்துக்கு அப்புறம் சந்திரோதயம் இல்லையல்லவா? அதற்காகத் தாம் செய்த கண்டனக் கிரந்தத்துக்கு, சூரியோதயம் என்று பெயர் வைத்தார்.

அந்தத் தேசிகர் மஹா வித்வான். எதிலும் நிரம்ப யோக்கியதை உடையவர். அதனுல்தான் ஊரூராக அவருக்கு ஒரு ஸந்நிதி ஏற்படுத்திக் கொண்டாடி வருகிருர்கள். அவருக்கு நிகமாந்த மஹா தேசிகன் என்று பெயர்.